Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

## அபாயகரமான மருந்துப் பொருள்கள் இலங்கைக்கு இறக்குமதி

தடை செய்யப்பட்ட மற்றும் அபாயகரமான மருந்துப் பொருள்களை சில வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் கொழும்புத் துறைமுகத்தினூடாக நாட்டினுள் நுழைந்துள்ளதை பொலிஸ் புலனாய்வுப் பிரிவு கண்டறிந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. வெளிநாட்டு பதிவின் கீழ் சண் மருந்து உட்பட 20க்கும் மேற்பட்ட வகையிலான மருந்துகள் இவ்வாறு இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது. ஏனைய நாடுகளால் பாவனைக்கு உதவாதவை என நிராகரிக்கப்பட்ட பல்வேறு மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்ய வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளூரில் உள்ள சில நிறுவனங்களை அணுகியதாக விசாரணைகள் மூலம் (6ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 18 (02.03.94) புதன்கிழமை ஓசை 12

—சமாதான முயற்சியில் ஈடுபடும்—

# கிறிஸ்தவ அமைப்புகள் மீது பௌத்த அமைப்புகள் பாய்ச்சல்

## அரசியல் தீர்வு தவறான வழிமுறையாம்

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு சமாதான ரீதியில் அரசியல் தீர்வொன்றைக் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவ அமைப்புக்கள் மீது சிங்கள - பௌத்த அமைப்புக்கள் கடும் சீற்றம் கொண்டுள்ளன. வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும் என்ற தேவாலயங்களின் விருப்பம் முற்றிலும் பிழையானவை எனவும் அவ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இச் சண்டனத்தை வெளியிட்டுள்ள முக்கிய சிங்கள-பௌத்த தீவிர அடிப்படைவாத அமைப்பான சிங்கள-பௌத்தமகாசங்கத்தின்தலைவர் குணதாசா வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்விற்கு ஒரே வழி யுத்தம்தான். இதை நாம் தெளிவாக உணர வேண்டும். வடக்கு-கிழக்குப் பிரச்சினையை அரசியல் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்ற பல்வேறு அமைப்புக்கள், தேவாலயங்கள் விரும்புகின்றன. இவர்களின் நோக்கம் முற்றிலும் பிழையானது என்றே கூறவேண்டும் எனத் தெரிவித்தார்,

யுத்தத்தினால் இப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என எண்ணுபவர்கள் இந்த அரசாங்கத்தின் கீழ் இருக்க கூடியவர்கள் அல்ல. அவர்களை இந்த அரசாங்கம் வெளியேற்ற வேண்டும். இவர்களின் இந் நடத்தையினால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவத்தினர் உளரீதியாக பாதிப்பு அடைந்து பலவீனம் அடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடைபெறக் கூடாது. அவர்களை பேச்சுக்குக் கூட (6ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்தவ அமைப்புகள் ஜனாதிபதியை சந்திக்க எடுத்த முயற்சி தோல்வி

சமாதான முயற்சியில் ஈடுபட்டு வரும் கிறிஸ்தவ அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்திப்பதற்கு ஜனாதிபதி மறுத்துவிட்டார்.

வடபகுதிக்கு நல்லெண்ணத்தும் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

தமது வடபகுதி நல்லெண்ண விஜயம் குறித்தும் நிலையில் இவர்கள் உள்ளனர்.

இதனால் சமாதான முயற்சியின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து கிறிஸ்தவ மதகுருமார்கள் முடிவெடுக்க

## கிழக்கில் ஊரடங்கு

## வவுனியா பகுதியில் காவலரண்மீது தாக்குதல்

(கொழும்பு)

வவுனியா நகரசபைக்கான தேர்தல் நேற்றுக் காலை ஆரம்பித்து இரண்டு மணித்தியாலங்களில் விடுதலைப் புலிகள் வவுனியாவின் வடக்கு முன்னரங்குப் பகுதியில் இருந்த இராணுவ நிலைகளைத் தாக்கியதாக இந்திய வானொலி தெரிவித்தது.

வவுனியாவிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள கொக்குவில், சமயபுர பகுதி இராணுவநிலைகள் மீது புலிகள் இரு தாக்குதல் (6ஆம் பக்கம் பார்க்க)

## பங்கீட்டு அட்டைக்கு 4 லீற்றர் மண்ணெய்

(நமது நிருபர்)

'மாகோ' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள மண்ணெண்ணெய் விரைவில் பங்கீட்டு அட்டைக்கு நான்கு லீற்றர் வீதம் விநியோகிக்கப்படவுள்ளதாகயாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (6ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு வாக்குச் சாவடிகளில் பொலிசாரே வாக்களித்தனர்

(கொழும்பு)

கிழக்கில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களில் சிறிலங்கா பொலிசாரினதும் படையினரதும் தலையீடுகள் அதிகமாக இருந்ததாக சர்வதேச் செய்தி ஸ்தாபனங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு பகுதியில் ஏறாவூர் காத்தான்குடி பகுதியில் காலை 9 மணியுடன் வாக்குச்சாவடி ஒன்று பொலிசாரால் மூடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. நகரிலும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடிக்கு காலையில் சென்ற சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் வாக்களிப்பு முடிவடைந்து விட்டதாக கூறிவிட்டு அவருடன் சென்ற பொலிசாரை வாக்குச் சாவடியினுள் வாக்களிக்கச் செய்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் காத்தான்குடி பகுதிகளில் அமைந்திருந்த நான்கு வாக்களிப்பு நிலையங்களில் பொலிசார் விண்ணை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து அங்கு நின்றவர்களை விரட்டி விட்டு தாமே வாக்களிப்பில் ஈடுபட்டிருந்ததாகவும் மட்டக்களப்பில் பரவலாக பொலிசாரும் இராணுவமும் ஐ.தே.கவிற்கு ஆதரவாக வாக்களித்தனர் எனவும் இப் பகுதி தமிழ் எம். பி ஒருவர் குற்றஞ்சாட்டினார். இது குறித்து அவர் மட்டக்களப்பு இராணுவ அதிகாரி ரோகான் (6ஆம் பக்கம் பார்க்க)

கிழக்கு உள்ளூராட்சி தேர்தல்

## கிராம மட்டத்தில் அரசியல் கட்சிகள் மோதல்

(கொழும்பு)

முஸ்லிம்காங்கிரஸும் யு. என் பியும் போட்டியிடும் இடங்களில் இருதரப்பினரிடையிலும் போட்டி கடுமையாக இருந்தது வேட்பாளருக்கிடையிலும், கிராம மட்டங்களில் அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன;

## வாக்குப் பெட்டிகள் பொலிசாரால் கடத்தல்

விஜயத்தை மேற்கொண்ட இவ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கொழும்பு திரும்பிய

அதன் பெறுபேறுகள் குறித்தும் ஜனாதிபதிக்கு எடுத்து விளக்குவதற்கு முடியாத

முடியாதநிலையில் உள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# பௌத்த பீடத்தலைவர்கள் ஏப்ரலில் யாழ். செல்வர்

## 'லங்காதீப' பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்தபீட தலைவர்களும், பௌத்த பீடபிக்குகளில் சிலரும் மிக விரைவில் யாழ்ப்பாணத்திற்கான பயணம் மேற்கொள்ள இருப்பதாக ''லங்கா தீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் சமாதானக்குழுக்களாக யாழ்ப்பாணம்செல்ல இருப்பதாகவும், வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு ஒரு அமைதித் தீர்வு காணும் பொருட்டு விடுதலைப் புலிகள் விடுத்த அழைப்பை ஏற்றும், யாழ்ப்பாணத்தின் உண்மைநிலையை அறியும் நோக்குடனும் இவர்கள் இப்பயணத்தை மேற்கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இப் பௌத்தமத குருமார் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணம் சென்றதும் புலிகளுடன் சமாதான பேச்சு வார்த்தைகள் நடைபெறும் என்றும், அக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இக் குழுவினர் ஏப்பிரல் மாத இறுதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் செல்வார்கள் என்றும் அப் பேச்சாளர் உறுதி அளித்துள்ளார்.

## பயணங்களின் போது

# வாகனங்களுக்குரிய ஆவணங்கள் எடுத்துச் செல்லுமாறு கோரிக்கை

சகல வாகன உரிமையாளரும் தமது வாகனங்களில் செல்லும்போது வாகனங்களுக்குரிய ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறும் முக்கியமாக 1993ஆம் ஆண்டிற்கான இறைவரிப் பத்திரத்தை எடுத்துச்செல்லுமாறும் தமிழீழ காவல்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தமிழீழ காவல் துறையினர் விடுத்துள்ள அறிக்கையில்;

தமிழீழ தாயகத்தின் விடுதலைக்கான மண்மீட்புப் போர் நடந்துகொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் எமது மக்கள் அளப்பரிய தியாகங்களையும், அர்ப்பணிப்புகளையும் புரிந்து வருகின்றனர். சிங்கள அரசின் எத்தகைய கொடிய அடக்கு முறைகளுக்கும் முகங்கொடுக்க திடசங்கர்ப்பம் பூண்டுள்ளனர். கட்டுப்பாடான, ஒழுங்கான, நீதியான உன்னத சமுதாயத்தின் விடுதலையை எதிர் நோக்கிய வண்ணம் உள்ளனர். சிங்கள அரசின் பொருளாதாரத் தடை, இராணுவ நடவடிக்கை இவைகளுக்கு மத்தியில் எமது மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்காக பல்வேறு வேலைத் திட்டங்கள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதை எமது மக்கள் எல்லோரும் நன்கறிவார்கள். இவற்றுள் ஒரு பகுதியாகவே சட்டம், ஒழுங்கைப் பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன; எமது மக்கள் போர்க்கால சூழ்நிலையில் முகங்கொடுக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு எமது மக்களை எந்த வகையிலும் பாதிக்காத வண்ணமே நாம் சட்டம், ஒழுங்கைப் பேணிப் பாதுகாத்து வருகின்றோம். இந்த வகையில் எமது பிரதேசத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் வாகன உரிமையாளர்கள் அனைவரையும் தமது வாகனங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கடந்த பல மாதங்களாக நாம் அறிவித்தல் கொடுத்திருந்தோம். இதற்கான கால எல்லை பற்றிய அறிவித்தல் 16-12-93இலும், அதற்கு முன்னரும், பின்னரும் பல

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நேற்றிரவு ஊரடங்குச் சட்டம்அமுலாக்கப்பட்டிருந்தது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்றிரவு 10 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிக்கு நீக்கப்பட்டது.

## இன்று படகுச்சேவை இல்லை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று நடைபெற மாட்டாது என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர். அடுத்த படகுச்சேவை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## காவல்துறை நடவடிக்கை

(மானிப்பாய்)

யாழ். நகரினதும் ஏனைய பகுதிகளினதும் முக்கிய சந்திகளில் தமிழீழ காவல்துறையினர் பதிவு செய்யப்படாத ஊர்திகளுக்கு குற்றப்பணம் அறவிட்டதை நேற்றைய தினம் காணக்கூடியதாய் இருந்தது. ஓட்டுமடம் சந்தி, தட்டாதெருச்சந்தி, கச்சேரி-நல்லூர் வீதி, நாவலர் வீதிச் சந்தி, கந்தர்மடம் சந்தி, அரசடிச்சந்தி, வின்சர் சந்தி, சத்திரத்துச் சந்தி, பஸ்தியன் சந்தி. மாம்பழம் சந்தி, ஆரியகுளம் சந்தி மற்றும் ஏனைய நகர்ப்புறங்களிலுமுள்ள பிரதான சந்திகளில் காவல் துறையினர் இக்கடமைகளில் ஈடுபட்டதை காணக்கூடியதாய் இருந்தது. (07)

## பொலிசாரால் கடத்தல்

(திருமலை)

திருகோணமலையில் வாக்குப் பெட்டிகளை திருடுவதில் பொலிசார் ஈடுபட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. 10 வாக்குப் பெட்டிகளை இவ்வாறு பொலிசார் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

சட்டவிரோதமாக வாக்களிக்கும் பொருட்டு இவை கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இக் குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் கொழும்பில் மறுத்துள்ளார்.

# தேர்தலில் ராணுவ தலையீடு நிரூபித்தால் ராஜினாமா

## பிரிகேடியர் றொகான் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினர் தேர்தலில் தலையிட்டார்கள் என சம்பவங்கள் இடம்பெற்றன; இவ்வாறு அமல்ஜெயசிங்கா பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

ஆதார பூர்வமாக நிரூபித்தால் மார்ச் 2-ம் திகதி எனது பதவியை ராஜினாமாச் செய்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# அரச அதிபரிடம் 4அம்ச கோரிக்கை வெகுஜன அமைப்புக்கள் சமர்ப்பிப்பு

(நமது நிருபர்)

யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நான்கு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை நேற்றுக்காலை யாழ் அரசாங்க அதிபரிடம் கையளித்தது.

இம் மகஜரில் குறிப்பிட்ட கோரிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏழு நாட்கள் அவகாசம் விதிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஒன்றியம் விதித்த காலக்கெடு போதாமல் இருப்பதாக சுட்டிக் காட்டிய யாழ் அரச அதிபர் இம் மகஜரை உரிய இடத்திற்கு அனுப்பி அதற்கான பதிலைப் பெற்றுத்தர தமக்கு குறைந்தது ஒருமாதகால அவகா

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# மலேரியா மருந்து யாழ்ஆஸ்பத்திரியில்இல்லை

(யாழ்ப்பாணம்)

மலேரியா நோய்க்குபாவிக்கப்படும் குளோறோகுயின் மருந்து வில்லைகள் யாழ் போதனா மருத்துவமனையில் தீர்ந்து விட்டது என யாழ் மருத்துவமனை வட்டா

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# கிளாலி கடல் நீரேரி போக்குவரத்து தடையை நீக்க அரசு ஆலோசனை

(கொழும்பு)

கிளாலி கடல்நீரேரி மீதான தடையை நீக்குவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கிளாலிக் கடற் பரப்பினூடாக இரவிலும் பகலிலும் பொதுமக்கள் பயணம் செய்வதற்கு வசதியாக இந்த தடை நீக்கப்பட இருப்பதாகவும் இதன் முதற் கட்டமாக இத் தடைநீக்கம் குறித்து முப்படை அதிகாரிகளுடன் அரசாங்க உயர் அதிகாரிகள் சிலர் ஏற்கனவே ஆலோசனை நடாத்தியுள்ளனர்.

நேற்றுமாலை கொழும்பில் இருந்து எமக்கு கிடைத்த தகவல்களின் படி கிளாலிக் கடல் நீரேரி மீதான அரசின் தடை உத்தரவு நீக்கம் சம்பந்தமான ஆரம்ப நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன என்றும் மிக விரைவில் தடை நீக்கம் தொடர்பான அறிவிப்பு வெளிவரலாம் என்றும் தெரியவருகின்றது.

# வரி விளம்பரம்

### தொல்புரத்தில் "மார்க்கோசின்"

மார்க்கோசின் - பூச்சி கொல்லி, "சக்தி" இயற்கைப் பசளை, "நீமியா" உரம் என்பன விவசாயிகளின் நலன் கருதி தொல்புரம் சமநல சேவை நிலையத்தில் விற்பனையாகின்றன. உபயோகித்து அதிக பயன் பெறலாம். "மில்க்வைற்"
(இ-8745)

### சைனீஸ்-உணவுவகை-சூப்வகை

திருமணவைபவம், பிறந்தநாள், பிரியாவிடை, பாடசாலை வைபவங்கள்- ஏனைய விழாக்கள் - உடன் நாடவும் காருண்யா சைனீஸ் ஹோட்டல் இல 166, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (வேம்படி பாடசாலை முன்பாக)
(7647)

### தேவை

(காசாளர்) கெசியர் -கணக்காளர், பரிமாறுபவர், சமையல் உதவியாள் தொடர்பு காருண்யா சைனீஸ் 166 1-ம் குறுக்கு தெரு யாழ்ப்பாணம். (7648)

### "அகிலன்ஸ்"

சகல விதமான வாகனங்களின் இலக்கத் தகடுகளும் அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சள்+கறுப்பு) எழுத்தோவியர் "அகிலன்ஸ்" 426, கண்டி வீதி, அரியாலை. (7651)

## கால்நடை அபிவிருத்திக் குழு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட கால்நடை அபிவிருத்திக் குழுவொன்று கடந்த மாதம் 18 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவிற்கு யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என யாழ். செயலகபதில் அரச அதிபர்

# கிராமிய மேம்பாட்டு சிரமதானங்கள்

பல்வேறு வகைப்பட்ட கிராமிய மேம்பாட்டுத் திட்டங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தனது கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக நடைமுறைப்படுத்தி வருகிறது. இவற்றுள் கிராமத்தின் பொது வேலைகளை மனித வலுவினை ஒருங்கிணைத்து சிரமதான அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

முல்லை மாவட்டத்தில் இவ்வகையான பல சிரமதான நடவடிக்கைகள் நடைபெற்றன. செம்மலைப்பகுதி உவர் நிலப் பாதுகாப்புக்கு 25 மனித வலுவினைப் பயன்படுத்தி 5000 ரூபா பெறுமதியான வேலையும் தண்டைய மலைப் பகுதியில் எண்ணெய் விதை உற்பத்திக்காக 50 மனிதவலுவைப் பயன்படுத்தி 10000 ரூபா பெறுமதியான வேலையும் நடைபெற்றன.

முத்துஐயன் கட்டில் விதை உற்பத்தித் திட்டத்திற்கு 20 மனிதவலுவைப் பயன்படுத்தி 4000 ரூபா பெறுமதியான வேலையும் மன்னாகண்டலில் காளைச் சேவை நிலையம் அமைப்பதற்கு 15 மனிதவலு மூலம் 5000 ரூபா பெறுமதியான வேலையும் இடம்பெற்றுள்ளது.

மற்றும் ஆனந்தபுரம் குளம் புனரமைத்தல், பேராற்றில் புல்வளர்ப்பு வேலைகள், பெரிய இந்திமடுவில் குளம் புனரமைத்தல் புதற்குடவிலும் கனகரத்தினபுரத்திலும் தென்னை நாற்றுமேடை அமைத்தல் ஆகிய வேலைகளிற்கு 200 மனிதவலுவைப் பயன்படுத்தி 41,500 ரூபா பெறுமதியான செயற்பாடுகள் நடைபெற்றன.

இவ்வேலைகள் மூலம் கிராம மக்கள் தம் ஊர் பொது வேலைகளை தாமே எழுச்சியுடன்செய்யக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை பாஜ்கள் காங்கேசன்துறை சென்றன

## - பொருட்கள் இறக்குவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியிலிருந்து காங்கேசன்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களை இறக்குவதற்கான பாஜ்கள் இன்னமும் மீண்டும் எடுத்து வரப்படவில்லை. இதனால் பொருட்கள் இறக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

குமாரி கப்பலில் கொண்டு வரப்பட்ட இராணுவத்திற்கான விறகுகள் இறக்கப்படுவதற்காகவே இந்த பாஜ்கள் காங்கேசன்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், தற்போது விறகு இறக்கப்படாத நிலையிலும் கூட பாஜ்கள் அங்கேயே வைக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

பருத்தித்துறை இறங்குதுறையில் மூன்று கப்பல்களில் பொருட்கள் இறக்கப்படுவதாகவும் இதற்கு பாஜ்கள் உடன் தேவைப்படுவதாக கப்பலில் இருந்து கட்டளை கிடைக்கப்பெற்ற பின்னர் கூட பாஜ்கள் திரும்ப அனுப்பப்படவில்லை எனவும் தெரியவருகிறது.

காங்கேசன்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இந்தபாஜ்கள் மீண்டும் பருத்தித்துறைக்கு கொண்டு வரப்படுமா என்பது குறித்து தற்போது ஐயம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (நி)

# ஆசிரியர் கல்விச்சேவை அமைப்பு உருவாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)
யாழ். கல்வித்திணைக்களத்தினால் ஆசிரியர் கல்விச் சேவை ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இவ்ஆசிரியர் கல்விச்சேவை ... புடையோர் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் மேற்படி கல்விச் சேவைக்கு பொதுப்பரீட்சை ஒன்றின் மூலம் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான பரீ

# ஒரே கயிற்றில் தொங்கி இரு யுவதிகள் தற்கொலை

(முல்லைத்தீவு)
திருமணமாகாத இருஇளம் யுவதிகள் ஒரே கயிற்றில் தூங்கி தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று வள்ளிபுனம் பகுதியிலுள்ள திலேஷ் குடியேற்றத் திட்டத்தில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்றுள்ளது.

விமலநந்தினி சண்முகராசா (19 வயது), ரஜனி செல்லத்தம்பி (16வயது) ஆகியோரே இச்சம்பவத்தில் உயிர் இழந்தோராவர்.

சம்பவ தினமன்று அதிகாலையில் தமது வீட்டிற்கு அருகேயுள்ள மாமரமொன்றில் பைப் ஒன்றைப்போட்டு அதில் போடப்பட்ட கயிற்றின் இரு முனைகளிலும் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளனர். இதுவரை இவர்களது தற்கொலைக்கான காரணம் தெரியவில்லை எனவும் முல்லைத் தீவுப் பகுதி காவல்துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் மேலும் கூறப்படுகிறது.


யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்

## கட்டிடத் திறப்பு விழா

இடம்: இல. 81, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்
காலம்: 1994-03-02 புதன் மு.ப. 11-00 மணி
தலைவர்: திரு. ந. தர்மபாலன் அவர்கள் (அதிபர்)

பிரதம விருந்தினர்
திரு. திருமதி கா. மாணிக்கவாசகர் அவர்கள்
(அரசாங்க அதிபர் யாழ் மாவட்டம்)

கௌரவ விருந்தினர்
திரு. நா. சுந்தரலிங்கம் அவர்கள்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், வேலணை, ஊர்காவற்றுறை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம்,
1994-02-23
(7639)

அதிபர்,
ஆசிரியர், மாணவர்கள்,
பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.



யாழ். மறைமாவட்ட
கத்தோலிக்க திருச்சபையின்
மேய்ப்புப் பணி

## மகாநாடு

**1. இம்மகாநாட்டை கூட்டுவது யார்?**

"அனைத்துலக மக்களே நமதாண்டவர்-கிறிஸ்துவுக்கு கதவைத் திறந்து விடுங்கள்" - என்ற வத்திக்கான் நகரில் இருக்கும் திருத்தந்தையின் அறைகூவலை ஏற்று, இலங்கை ஆயர் சங்கத்தின் முடிவுப்படி கூட்டப்படுகிறது.

**2. இம்மகாநாடு எங்கெங்கு நடத்தப்படுகிறது?**

இம்மகாநாடு இலங்கையின் ஆயர்கள், குருக்கள், பொது நிலையினர் இணைந்து - இலங்கைக் கத்தோ



கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### வர்த்தகமுகாமையாளர் - 165]88|106/9

**சம்பள அளவுத் திட்டம்:**

1405|- — 60 X 4 — 75 X 11 — 2470|-
இவற்றுடன் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள்:**

அ) கூட்டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில், அதே துறையில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11-வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் அல்லது அதற்குச்சமமான தராதரமும், ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல், வழங்கல், பொருள் விநியோகம், பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி போன்ற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தர தராதரப் பத்திரம்/கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும், ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல், வழங்கல், பொருள் விநியோகம், பொருள்களின் இறக்குமதி, ஏற்றுமதி போன்ற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

**வயதெல்லை:**

20 — 40 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சங்கப்பணியாளருக்கு வயதெல்லையில் விலக்களிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் 10-03-94-ம் திகதிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி "தலைவர், கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி"

தலைவர்

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்,
கரவெட்டி,
01-03-94 (சி-8748)



# நினைவு கூருகின்றோம்..

## 1994. 03. 02

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-
செல்லத்தம்பி சுப்பிரமணியம்
(வந்தாறுமூலை - மட்டு)
மலையகம் - பொகவந்தலாவைப் பகுதியிற் சிறி

...குழுவிற்கு யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தலைவராக தெரிவு செய்யப் பட்டுள்ளார் என யாழ். செயலகத்தில் அரச அதிபர் திருமதி திலகநாயகம் போல் தெரிவித்தார்.

மேலும் இக் குழுவில் கால்நடை வைத்தியர்கள் உதவி அரச அதிபர்கள் போன்றோர் அங்கம் வகிக்கின்றனர். இக் குழுவின் முக்கிய நோக்கம் கால்நடைகளை அபிவிருத்தி செய்தல் ஆகும். அத்துடன் இது சம்பந்தமாக மாதாந்தம் செயலக மட்டத்திலும் பிரதேச செயலக மட்டத்திலும் கூட்டங்கள் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டது. (பா,தி)

## வீதிநாடகமும் கருத்தரங்கும்

மகளிர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி எங்கும் வீதி நாடகமும் கருத்தரங்குகளும் வட்டவை ரீதியாக நடைபெற்று வருகின்றன.

பெண்களுக்கு எதிரான அடக்கு முறைகளை உடைத்தெறிய பெண்கள் அனைவரும்போராட்டத்தில் இணைய வேண்டும் எனும் கருத்தை வெளிப்படுத்தும் வகையில் இந் நாடகமும் கருத்தரங்குகளும் அமைந்துள்ளன. (86)

## தபாலதிபர் விபத்தில் பலி

கொள்ளுப்பிட்டி தபாற் கந்தோரின் தபாலதிபர் திரு. இ. இராமச்சந்திரன் (42 வயது) பஸ்—லொறி விபத்தில் பலியானார். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. இ. இராமச்சந்திரன் வட்டுக்கோட்டை தபாற் கந்தோரில் தபாலதிபராகப் பல வருடங்கள் கடமையாற்றிய பின் கொள்ளுப்பிட்டி தபாற் கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்.

இவர் சம்பவதினம் (18-2-91) காலை 8-00 மணியளவில் கொள்ளுப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்ற பஸ் லொறி விபத்தில் ஸ்தலத்திலேயே பலியானார். இவ் விபத்தில் 3 பேர் பலியானதும் 11 பேர் படுகாயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

...தினால் ஆசிரியர் கல்விச் சேவை ஒன்று உருவாக்கப் படவுள்ளது.

இவ்ஆசிரியர் கல்விச்சேவையில் மூதன்மை ஆசிரியர், தொலைக்கல்விப் போதனாசிரியர் மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டத்துடன் தொடர்

இவர்கள் அனைவரும் மேற்படி கல்விச் சேவைக்கு பொதுப்பரீட்சை ஒன்றின் மூலம் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர். இதற்கான பரீட்சை இம் மாதம் நடைபெறவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (யா)

## முதலாவது பிறந்ததின வாழ்த்துக்கள்



### செல்வி துர்க்கேஸ்வரி

தெல்லிப்பழையைச் சேர்ந்த கோணேஸ்வரன் இமயவள் (துளசி) தம்பதிகளின் அருமைப்புதல்வி துர்க்கேஸ்வரி (துர்க்கா) தனது முதலாவது பிறந்த நாளை நேற்று (1- 3- 94) தனது இல்லத்தில் (நாவலர் றோட் ஐந்து சந்தி) சிறப்பாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, மாமா, மாமி, சாமிலா மச்சாள், நிதிதிலா மச்சாள், அப்பப்பா, அப்பம்மா, குகன் சித்தப்பா (பிரான்ஸ்), செல்வத்தி சித்தப்பா, அத்தைமார், உற்றார், உறவினர் ஆகியோர் துர்க்கை அம்மன் அருளால் நூறாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தினார்கள். இவர் காலஞ்சென்ற சுப்பையா ஆசிரியரின் அருமைப்பேர்த்தியும் ஆவார்.

(7644) - குடும்பத்தினர்.

**2. இம்மகாநாடு எங்கெங்கு நடத்தப் படுகிறது?**

இம்மகாநாடு இலங்கையின் ஆயர்கள், குருக்கள், பொது நிலையினர் இணைந்து - இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் மகாநாடாக - தேசிய ரீதியில் கொழும்பில் நடத்தப்படும். அதைவிட இலங்கையின் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மறைமாவட்ட ஆயர் தலைமையில் நடத்தப்படும். ஒவ்வொரு மறைமாவட்ட கத்தோலிக்க மக்கள் அனைவரும் இதில் பங்குகொள்வர்.

**3. யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப்பணி மகாநாடு எப்போ கூட்டப் பெறுகிறது?**

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப்பணி மகாநாடு இம்மாதம் 8-ம் திகதி முதல் 14-ம் திகதி வரை புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடத்தப்படுகிறது. குருக்கள், பொது நிலையினர், துறவியர் எல்லோரும் இம் மகாநாட்டில் பங்குகொள்வர்.

**4. மேய்ப்புப்பணி மகாநாட்டின் நோக்கம் என்ன?**

கி. பி. மூன்றாவது ஆயிரமாம் ஆண்டுகளின் உதயத்தை நோக்கி நிற்கிறோம். இப் புதிய காலத்தில் காலடி வைக்குமுன்னர் நம்மை ஆய்வு செய்வது தான் முக்கிய நோக்கம். எம் மீட்பராகிய இயேசு அப்போஸ்தலர் வழியாக அமைத்த மறைபரப்புப் பணியையும், தனி மனித புதுப்பித்தலையும் புத்துணர்வுடன் செயல்படுத்த திருத்தந்தை நமக்கு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்று ''தன்னை புதுப்பித்து பகிரும் ஒரு திருச்சபையை நோக்கி'' என்னும் தலைப்பில் நம்மை ஆய்வு செய்வது தான் நோக்கம்.

**5. முன்பு இது போன்ற மகாநாடு நடத்தப்பட்டதா?**

ஆம் இன்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் தேசிய மறைப் பணி சங்கம் நடைபெற்றது. அதாவது இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நடைபெற்ற பின்னர் சங்கம் வெளியிட்ட நெறிமுறைகளை ஆராய்ந்து நடைமுறைப் படுத்த தேசிய ரீதியில் முதலாவது தடவையாக இலங்கையின் தேசிய மறைப்பணி சங்கம் கூட்டப்பட்டது.

அன்பளிப்பு

திருமதி பி. எவ். சின்னத்துரை (அதிபர்)
ஆசிரியர்கள், மாணவர்.
யா/ புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம்

பொதுமக்கள் தொடர்புக் குழு
மேய்ப்புப்பணி மகாநாடு

(இ-8750)

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

**செல்லத்தம்பி சுப்பிரமணியம்** (வந்தாறுமூலை - மட்டு)

மலையகம் - பொகவந்தலாவைப் பகுதியிற் சிறிலங்காக் காடையர்களினால் வெட்டிக் கொல்லப் பட்ட 'கிறீன்வில்' தோட்டக் கங்காணியான தமிழ்ப் பொதுமகன்.

1987ஆம் ஆண்டு திருமலை- மணியரசன்குளம் பகுதியில் மாட்டுவண்டியில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**அப்துல்லா** (ஆ. அருட்பிரகாசம் - கந்தளாய் - திருமலை)

1989ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். குகேந்திரன்** (குருகுலசிங்கம் அரசரத்தினம் - ஆசிகுளம் - வவுனியா)

இதே பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய,

**மேஜர் கமல்** (அருணாசலம் தேவர் சந்தரராஜன் - 4-ம் வாய்க்கால்- கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக் காய்ச்சல் நோயின் காரணமாக சாவைத்தழுவிய

**மென்டிஸ்** (குணம் சந்திரசேகரம் - அளவெட்டி வடக்கு - யாழ்)

1992ஆம் ஆண்டு போராளிகளிற்கான பாதுகாப் பகழி அமைக்கவென 'சிலிப்பர்' கட்டைகளை ஏற்றி வரும்போது யாழ்- சாவகச்சேரி, கைதடிப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் சாவைத்தழுவிய,

நாட்டுப்பற்றாளரான,
(மாணவர் இயக்க உறுப்பினர்)

**சத்தியநாதன் சதீஸ்வரன்** (கைதடி வடக்கு. சாவகச்சேரி-யாழ்)

மட்டு - குடும்பிமலை முகாமை அண்டிய பகுதிகளில் தேடுதல் வேட்டையிலீடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாகிச் சித்திரவதை செய்யப்பட்டுச் சுட்டும், வெட்டியுங் கொல்லப்பட்ட 42தமிழர்கள்.

1993ஆம் ஆண்டு கிளாலிக்கடற்பரப்பில் பயணிகளுக்கு பாதுகாப்பு வழங்கிய போது சிறிலங்காக் கடற்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**கடற்புலி கப்டன் வேந்தன்** (ஐயப்பெருமாள் சத்தியசீலன் - முதலாம் வட்டாரம் உடப்பு-புத்தளம்)

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-8743)

# விஞ்ஞானத்திற்கு ஓர் அறிமுகம்

## முகவுரை

இன்று எமது மாணவ சமுதாயம் திட்டமிட்ட இன வெறிஅரசின் சதியின்மத்தியில் தனதுகல்வியைதொடரவேண்டியுள்ளது. எந்தத் தடைவரினும் எதிர்த்து எமது கல்வி வளத்தை பேணவேண்டியுள்ளது.

இந்த வரிசையில் கடந்த சில ஆண்டுகளாக புள்ளி விபரத்தின்படி விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் மாணவர் சித்தியடைந்த விகிதம் மிக குறைவாக உள்ளது. வகுப்பறைக் கற்பித்தலின்போது மாணவர்களிடம் அடிப்படை சார்ந்த அறிவு குறைவாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளது இக்குறையை நீக்கும் முகமாக பத்திரிகை மூலம் மாணவரின் அடிப்படை அறிவை கூட்ட இம் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அடிப்படை அறிவு கிடைக்காமைக்கு மாணவர்களிற்கு நூல்கள் கிடைக்காமை அல்லது மாணவர் முயற்சி எடுக்காமை நேரத்தை பயன்படுத்தாமை என்பன காரணங்களாகலாம். இம்முயற்சி மூலம் அடிப்படை அறிவை அறியும் வாய்ப்பு மாணவ உலகிற்கு ஏற்படுகிறது.

மாணவர் இலகுவில் பாடங்களை கற்க ஒழுக வேண்டிய முறைகள் வாசித்து கிரகிக்கக்கூடிய ஆற்றலை வளர்த்தல் வேண்டும் ஏதாவது ஒரு பாடத்தை முற்றாக விளங்கிய பின்பே அடுத்த அலகு பயில வேண்டும்.

ஒவ்வொரு அலகு முடிவிலும் சுய மதிப்பீட்டிற்காக வினாக்கள் செய்யப்பட வேண்டும்

எந்த வினாவுக்கும் உரிய பிரச்சினையை முடிந்தவரை தானே தீர்க்க எத்தனித்தல் வேண்டும் பிறரிடம் முழு விடையையும் எதிர்பார்க்க கூடாது.

உமது பிரச்சினைக்குரிய விடயத்தை விடையளித்து அது பற்றிய அறிவுடையோரிடம் சரி பிழை பார்த்தல் வேண்டும்

குறித்த கால இடைவெளியில் மீட்டல் முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும்,

விஞ்ஞானம் என்றால் என்ன? என்னும் வினாவுக்குரிய விடையை அறிந்த பின்பு விஞ்ஞானக் கல்வியை தொடர்வது மிக இலகுவானதாகும்.

எமது சூழலையும் அதில் ஏற்படும் இயற்கை தோற்றப்பாடுகளையும் அவற்றிற்கிடையிலுள்ள தொடர்புகளையும் ஆராய ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வியறிவே விஞ்ஞானம் ஆகும்.

ஒரு தோற்றப்பாட்டை ஆராய்ந்து அறிய விஞ்ஞானத்தில் பின்வரும் படிமுறைகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம் ஆகும்.

01) தோற்றப்பாட்டை அவதானித்தல்
02) ஆராய வேண்டிய அவதானிப்பை (பிரச்சினையை) வரையறுத்தல்
03) அதற்குத் தேவையான தரவுகளைச் சேகரித்தல்
04) அத்தரவுகளை கொண்டு கருதுகோள் ஒன்றை உருவாக்கல்
05) கருதுகோளை பரிசோதனைக்கு உட்படுத்தல்
06) கருதுகோளை உறுதிப்படுத்தல் அல்லது நிராகரித்தல் அல்லது மாற்றி அமைத்தல் என்பனவாகும்

(அ) அவதானிப்பு
i. ஐம்புலன்களால் நேரடியாகவோ அல்லது துணைக் கருவிகளாலோ அறியலாம்
ii. மீண்டும் மீண்டும் பெறக் கூடியதாக இருக்க வேண்டும்
iii. அவதானம் மாறாது இருந்தாலே ஆராய வாய்ப்பானதாகும்.

(ஆ) அவதானிப்பிற்குப் பொருத்தமான வினாவை உருவாக்கலே பிரச்சினையை வரையறுத்தலாகும்.

உதாரணமாக:- வீட்டிலுள்ள ஒரு மாமரம் காய்க்கவில்லை எனில்
(i) காய்க்காத மாமரத்தை ஏன் நட்டேன்? என்று வினாவாது
(ii) மரத்தில் காய் உருவாகாதமைக்கு தொடர்பான காரணிகள் எவை என அறிய முற்பட வேண்டும்?

1-ம் வினாவில் காய்க்காத மாமரம் என்பதற்கு சான்றுகள் எதுவும் இல்லை.

(இ) மேலும் அவதானித்தல், நூல்கள், செய்தித்தாள்கள் மூலம் தகவலைத் திரட்டலாம்.

(ஈ) கவனத்துடன் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு புதிய அவதானிப்புக்களைப் பெற்று மேலும்தகவல்களைத் திரட்டி கருதுகோளை உறுதிப்படுத்தவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது மாற்றி அமைக்கவோ முடியும்.

எமது சூழலை நாம் அவதானித்தால் அவற்றில் பின்வரும் தன்மையான பொருட்களைநாம்காணமுடியும். இதை பின்வரும் பாகுபாடு காட்டுகிறது.

(அ) (a) எமது சூழலில் உள்ள பொருட்கள் இருவகைப் படும்
01) உயிருள்ளவை
02) உயிரற்றவை

(b) உயிருள்ளவை இருவகைப்படும்
01) தாவரம் 02) விலங்கு

(c) உயிரற்றவை இருவகைப் படும்
01) சடப்பொருள்
02) சக்தி

சாதாரணமாக விஞ்ஞானம் கற்கும் மாணவன் மேற் கூறிய நான்கு வகையான பொருட்களையும் அவற்றிற்கிடையிலுள்ள தொடர்புகளையுமே ஆராய்கிறான் என்பதை மனதில் பதிக்கவும்.

உயிரினம் (அங்கி)

(a) இவை 'கலம்' என்னும் அடிப்படை அலகால் ஆக்கப்பட்டவை ஆகும்.

கலம் என்பது முதலுரு என்னும் புரதத் தன்மையான உள்ளடக்கத்தை கலமென்சவ்வால் எல்லைப்படுத்தி ஆக்கப்படும்.

உயிரினங்கள் பின்வரும் பொதுஇயல்புகளைக் கொண்டவையாக இருக்கும்.

i போசணை காணப்படல் (உணவைப் பெறுதல்/ உட்கொள்ளல்)
ii வளர்ச்சி காணப்படல்
iii சுவாசித்தல்
iv கழிவகற்றல்
v இனப்பெருக்கம்செய்தல்
vi உணர்திறன் காணப்படல்
vii வாழ்க்கைக்கு காலஎல்லை காணப்படல் என்பனவாகும்.

(அ) கலத்தின் முதலுரு இரு பிரிவுகளாகபகுக்கப்படும்
(i) கரு (ii) குழியவுரு

## மாணவர் அரங்கு

**சு. அருள்நேசன்**

சடப்பொருள்:-

(a) திணிவுள்ளதும் இடத்தை பிடிக்கக் கூடியதுமான பொருட்கள் சடப்பொருட்கள் எனப்படும்.

(b) சடப்பொருட்களின் அடிப்படை அலகு அணு ஆகும்.

(c) சடப்பொருட்களின் நிலைகள் மூன்று
(1) திண்மம் (2) திரவம்
(3) வாயு
உ+ம் இரும்பு நீர் நீராவி

சடப்பொருட்களின் வகைகள் மூன்று
(1) மூலகம் (2) கலவை
(3) சேர்வை

மூலகம் :-

ஒரே இனமான அணுக்களால் ஆக்கப்பட்ட வெவ்வேறு பதார்த்தங்களாக பிரிக்க முடியாதவை மூலகங்கள் ஆகும்.

உ+ம் சோடியம், ஐதரசன், இரசம்.

சேர்வையின் இயல்புகள்

சேர்வை:-
(1) ஒன்றுக்கு மேற்பட்ட மூலகங்களால் ஆனது.
(2) சேர்வையை ஆக்கும் கூறுகளுக்கிடையில் குறித்த விகிதம் காணப்படும்.
உ-ம் $CO_2$ என்பதில் C,O ஆகிய மூலகங்களுக்கிடையிலுள்ள விகிதம் 1:2 என்பதை காண்க?
(3) கூறுகளை இணைக்க சக்தி மாற்றம் தேவை.
(4) இலகுவான பௌதிக முறைகளால் கூறுகளை பிரிக்க முடியாது (வடித்தல், ஆவியாக்கல்)
(5) சேர்வை ஆரம்ப பொருட்களின் இயல்பை காட்டாது.
உ-ம் நீர் ($H_2O$) துரிசு ($CuSO_4$)

கலவையின் இயல்புகள்:-
(1) ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகளை கொண்டது
(2) கூறுகளுக்கிடையில் குறித்த விகிதம் காணப்படாது
(3) கூறுகளை இலகுவில் பிரிக்கலாம் (பௌதீக முறைகளால்)
(4) கூறுகளை இணைக்க சக்தி தேவை இல்லை.
(5) ஆரம்ப பொருட்களின் இயல்பை கலவை காட்டும்
உ+ம் (1) அரிசி+கல்
(2) இரும்பு-கந்தகம்
(3) வளி

கலப்பு உலோகங்கள்:-
(01) இவை உலோகமொன்றுடன் வேறு உலோகத்தை அல்லது வேறு மூலகத்தை கலந்து பெறப்படும்.
(02) மூலகம் என்ற வகையுள் அடங்கா கலவையில் சேரும்.
(03) கலப்பு லோகங்கள் திண்ம திண்ம கரைசலாக உள்ள கலவைகள் ஆகும்.

கலவையிலுள்ள கூறுகளை பிரிக்கும் முறைகள்

01. சீனி+மண் போன்ற நீரில் கரையக் கூடியதும் கரையாததுமான கூறுகளாயின்
∴ கரைத்து, வடித்து, ஆவியாக்க என்ற ஒழுங்கில் செய்து பிரிக்கலாம்

02. நீர்+தேங்காய் நெய் போன்ற ஒன்றுடன் ஒன்று கலக்காத திரவங்களின் கலவை எனில்
∴ பிரிபுனலைக் கொண்டு பிரிக்கலாம்

03 நீர்+மதுசாரம் போன்ற ஒன்றுடன்ஒன்று கலக்கக்கூடியதிரவங்களாயின்
∴ பகுதிபடக் காய்ச்சி வடித்தல் என்னும் முறையால் பிரிக்கப்படும்

மூலகங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
01. உலோகங்கள்
02. அல்லுலோகங்கள்

உலோகங்களின் இயல்புகள்
01. பளபளப்பானவை (மினுக்கமுடையவை)
02. நிலத்தில் விழும்பொழுது நாணயம் விழும் ஒலியைக் கொடுக்கும்
03. அடித்தால் நொருங்காது தகடாகும்
04. மின்வெப்பத்தைக் கடத்தும்
05. பொதுவாக நேர் அயனைக் கொடுக்கும்
உ-ம் சோடியம், பொட்டாசியம், கல்சியம், நாகம் இரும்பு, மக்னீசியம், வெள்ளி, செப்பு, இரசம், ஈயம், தகரம், (வெள்ளீயம்)· அலுமினியம், பேரியம், போன்றவை.

அலோகங்களின் இயல்புகள்
01. பளபளப்பற்றவை
02. நிலத்தில் விழும்பொழுது நாணயம் விழும் ஒலியைக் கொடுக்காது
03. அடித்தால் நொருங்கும்
04. இவற்றில் அனேகமானவை எதிரயனைக் கொடுக்கும்
உ-ம் காபன், கந்தகம், ஐதரசன், நைதரசன், குளோரீன், ஒட்சிசன், பொசுபரசு, போன்றவை.

குறிப்பு:-
1. பங்கிடும் இயல்புடையவையும் சடத்துவ மூலகங்களும் அலோகங்களே ஆனால் இவை அயனை கொடுப்பதில்லை
2. கூடியளவு பொருந்தும் இயல்புகளே பொதுஇயல்பாக கொள்ள வேண்டும்

| | கலப்பு லோகம் | | சேர்ந்துள்ள மூலகங்கள் |
|---|---|---|---|
| (01) | பித்தளை | - | செப்பும்+நாகமும் |
| (02) | வெண்கலம் | - | செப்பும்+தகரமும் |
| (03) | யேர்மன் சில்வர் | - | செப்பு+நாகம்+நிக்கல் |
| (04) | துருப்பிடியா உருக்கு | - | இரும்பு+காபன்+குறோமியம் |
| (05) | இன்வார் | - | காபன்+நிக்கல்+உருக்கு |
| (06) | நிக்குரோம்கம்பி | - | நிக்கல்+இரும்பு+குறோமியம் |

# தரமற்ற இழுவைப் படகுகளால் தொழிலாளருக்கு பெரும் ஆபத்து

(வடமராட்சி)

தரமற்ற இழுவைப் படகுகளினால் பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்கள் இறக்கும் தொழிலாளர்கள் ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். ...லேயே ஆபத்துக்கள் உண்டாக நேரிடுகிறது.

இவ்வகையான இழுவைப் படகுகளில் உட்செல்லும் கடல் நீரை வெளியேற்றுவதற்கு நீர் இறைக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டபோதிலும் இயந்திரம் மூலம் ...லும் இழுவைப்படகுகள் பொருள்களுடன் சரிந்த நிலையிலேயே கரைக்கு வந்து சேர்வதை அவதானிக்க முடிகிறது.

அதேசமயம் போதிய இழுவைப்படகுகள் இல்லாததி...

## சிறுமி ஒருவர் பரிதாப மரணம்

நாய் கடித்தபோதுபோதிய பராமரிப்புச்செய்யாத சிறுமியொருவர் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

கணபதிப்பிள்ளை கமலினி (வயது 11) என்ற சிறுமிக்கு ஜனவரி 15ஆம் திகதி நாய் கடித்தது என்றும் காயங்களுக்கு மட்டும் மருந்து கட்டியதாகவும் நாய் கடித்ததால் ...

### கல்லுண்டாய் முதல் அராலி வரை

# உவர்நிலப் பயிர்ச் செய்கை செயலகம் பரீட்சார்த்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாய் வெளியில் இருந்து அராலிவரைக்குமான பகுதியில் உவர்நிலப் பயிர்ச் செய்கை ஒன்றை பரீட்சார்த்தமாக மேற்கொள்ள ...

அத்துடன் மேற்படி உவர் நிலத்தில் கால் நடைகளுக்கான புல் வகைகளையும் ஒரு பகுதியில் பயிரிட நடவடி...

மேற்படி திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் தொடர்ந்தும் அப்பிரதேசங்களில் பயிர்ச் செய்கை பண்ணப்படும் எனவும் ...

களினால் பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்கள் இறக்கும் தொழிலாளர்கள் ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

நல்ல நிலையில் அல்லாத பாரிய துவாரங்கள் கொண்ட இழுவைப் படகுகள் மூலம் பொருள்களை இறக்கும் தொழிலாளர்கள் பொருள்களுடனும், இழுவைப்படகுடனும் கடலில் மூழ்கும் ஆபத்து தென்பட்டு வருகிறது.

இழுவைப்படகுகள் மூலம் பொருள்களை ஏற்றிவரும் போது அதிகளவில் கடல் நீர் உட்சென்று விடுவதினா

இவ்வகையான இழுவைப் படகுகளில் உட்செல்லும் கடல் நீரை வெளியேற்றுவதற்கு நீர் இறைக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டபோதிலும் இயந்திரம் மூலம் நீரை வெளியேற்றுவதைவிட கடல் நீர் உட்செல்லும் வேகம் அதிகரித்திருப்பதால் ஆபத்துக்கள் அதிகரிக்க வாய்ப்பு உண்டாகியுள்ளது.

பாவனைக்குதவாத வகையில் கைவிடப்பட வேண்டிய இழுவைப்படகுகளே சேவையில் ஈடுபட்டுவருகின்றன. இதனால் எந்த நேரத்திலும் தொழிலாளர்களுக்கு ஆபத்து ஏற்படலாமென அஞ்சப்படுகிறது. கடல் நீர் உட்செல்

நிலையிலேயே கரைக்கு வந்து சேர்வதை அவதானிக்க முடிகிறது.

அதேசமயம் போதிய இழுவைப்படகுகள் இல்லாததினால் பருத்தித்துறையில் தரித்து நிற்கும் சகல கப்பல்களிலிருந்தும் ஒரே நேரத்தில் பொருள்களை இறக்குவது கடினமாக இருக்கிறது இதனால் சில சமயங்களில் ஒரு சில கப்பல்கள் காங்கேசன்துறையில் வீணே தரித்து நிற்க வேண்டி ஏற்படுகிறது.

இத்துறைமுகத்தில் இழுவைப்படகுகளின் குறைபாடுகள் தீராத நிலை தொடர்கிறது. (யோ)

கணபதிப்பிள்ளை கமலினி (வயது 11) என்ற சிறுமிக்கு ஜனவரி 15ஆம் திகதி நாய் கடித்தது என்றும் காயங்களுக்கு மட்டும் மருந்து கட்டியதாகவும் நாய் கடித்ததால் ஏற்படும் உடல்வருத்தங்களை தடுப்பதற்கான ஊசி எதுவும் ஏற்றப்படவில்லையென்றும் தெரியவருகின்றது.

மிகவும் மோசமான நோய் தாக்கிய நிலையில் கடந்த வியாழனன்று யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இச்சிறுமி திங்களிரவு மரணத்தைத்தழுவிக் கொண்டார். (நி)(கி)

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாய் வெளியில் இருந்து அராலிவரைக்குமான பகுதியில் உவர்நிலப் பயிர்ச் செய்கை ஒன்றை பரீட்சார்த்தமாக மேற்கொள்ள யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்து வருவதாக யாழ் செயலகபதில் அரச அதிபர் நமது நிருபரிற்கு தெரிவித்தார்

இதே போன்ற ஒரு பரீட்சார்த்தத் திட்டமொன்று அண்மையில் கோப்பாய் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வெற்றியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் மேற்படி உவர் நிலத்தில் கால்நடைகளுக்கான புல் வகைகளையும் ஒரு பகுதியில் பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் தொடர்ந்தும் அப்பிரதேசங்களில் பயிர்ச் செய்கை பண்ணப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா), (தி)

# வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை இன்றைய சூழலுக்கு பொருத்தமானது

(வடமராட்சி)

இன்றைய தமிழீழ நிலைக்குப் பொருத்தமான பயிர்ச் செய்கை முறையாக வீட்டுத்தோட்டம் அமைகிறது. வீட்டுத்தோட்டமானது வீட்டின் நுகர்ச்சித் தேவைக்கு கூலி, குத்தகை உள்ளீட்டுச் சாதனங்கள் செலவுகள் இல்லாமல் மேற்கொள்ளப்படுகின்றது.

வடமராட்சிபோருட் நிறுவனத்தில் திரு. இரா. சந்திரசேகரசர்மா தலைமையில் நடைபெற்ற 'சூழல் மாசடைதலும் வீட்டுத்தோட்டமும்' என்ற தலைப்பில் ஹாட்லிக் கல்லூரி விவசாயப் பட்டதாரி ஆசிரியர் திரு. ப. ஈஸ்வரநாதன் முன்கண்டவாறு பேசினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது, வயல்களில் மேற்கொள்வது போன்று பருவகாலத்திலும் வீட்டுத்தோட்டத்தில் தொடர்ச்சியான விளைவைப் பெறமுடியும். அத்துடன் இன்றைய ஆட்கொல்லி நோயானஇதய நோய்கள் அரச ஊழியர்களையும் மற்றும் வியாபாரிகள் போன்ற தொழில் செய்வோர்களையும் அச்சுறுத்துகிறது

இவ்விதமானாதொழில்புரிவோருக்கும் போதிய உடற்பயிற்சி இல்லாமையால்தான் இந்நோய்கள் வருவதாக மருத்துவ நிபுணர்கள் கருதுகின்றார்கள். இவ்வித நிலை வீட்டுத்தோட்ட முறையால் நீக்குவதுடன் எமது உற்பத்திப் பொருட்களை நாமே நுகருவதால் பணம் மீதப்படுத்தப்படுகிறது. பூச்சி நாசினிகள் விசிறப்படும் காய்கறிகள் இலாப நோக்கம் கொண்டு விற்பனை செய்யப்படுவதால் மனிதன் நஞ்சூட்டப்படுகிறான். நஞ்சுப் பொருள்கள் உடலில் இருந்துகழிக்கப்படாததால் இது மனிதனுக்கு இறப்பை ஏற்படுத்தலாம்.

வீட்டு நிலங்களை சுத்தம் செய்யும் போது வரும் தாவரக் கழிவுகள், களைகள்என்பவற்றை எரிக்காமல் பழமரங்கள் மற்றும் பயிர்களுக்கு அருகில் சிறிது சாணம் அல்லது அவரைத் தாவரங்கள் அல்லது நைதரசன் வளமாக்கி சிறிது சேர்த்து புதைப்பதால் அவை மிகவிரைவில் தாவரத்தால் பயன்படுத்தப்படும்.

தமிழீழம் எரிபொருள் பொருளாதாரத் தடைக்கு உட்படுத்தப்படுவதால் பெற்றோலுக்குப் பதிலாக மண்ணெய் பயன்படுத்துவதால் வானத்தில் ஏற்படும் பூரண மாற்றம் தகனத்தால் காபனீரொட்சைட்டு காபனோரொட்சைட்டுவாயுக்கள் உண்டாகின்றன.

அத்துடன் திட்டமிடாத தாவர அழிப்பால் வளியில் காபனீரொட்சைட்டு கூடுவதால் சூழல் வளியில் வெப்பநிலை 150 வருடங்களுக்குள் ஆறு பாகை அதிகரிப்பதால் துருவப்பகுதியில் உள்ள பனிக்கட்டிகள் உருகுவதால் சில தீவுகள் நீரில் அமிழும் அபாயம் உண்டு. எனவே சூழல் மாசடைதலில் இருந்து தவிர்க்க சுய உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவுக்கான வீட்டுத் தோட்டத்தை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்றார். (யோ)

---

## உதவிப்பணம் வழங்கப்படுகிறது

வலி. வடக்கு உதவி அரச அதிபர் பிரிவில் தை, மாசி மாதங்களுக்குரிய மாதாந்த பொதுசன உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகிறது.

## இன்றைய நிகழ்வுகள்

நிதர்சனம் தயாரித்து வழங்கும் மாதாந்த வெளியீடான ஒளிவீச்சு ஜனவரிமாத வெளியீடு இன்று பிற்பகல் ஆறு மணியளவில் கைலாசபதி கலையரங்கில் அகன்ற திரையில் காண்பிக்கப்படவுள்ளது. வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் முதலாமாண்டு நினைவு தினம், தைத் திருநாள் கொண்டாட்டம், விமானக் குண்டுவீச்சு அழிவுகள் என்பன மற்றும் பல சுவையான அம்சங்களும் இவ் வெளியீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஃ

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை வழங்கும் ஆய்வரங்கத் தொடரில் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் அரசியல் நோக்கில் மாணிக்கவாசகர் என்னும் பொருளில் தமிழ்த்துறை விரிவுரையாளர் க. இரகுபரன் உரையாற்றவுள்ளார். பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையிலான இவ் ஆய்வரங்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

ஃ

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் புதிய கட்டிட திறப்பு விழா இன்று முற்பகல் பதினொரு மணியளவில் இல. 81, பிறவுண் வீதியில் நடைபெறும்.

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர் நிர்மாண நிதிக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று ஸ்கந்தா வி.கவை எதிர்த்து அன்ரனிஸ் வி.கவும், அரியாலை ஐ.வி.கவை எதிர்த்து பாடும்மீன் வி.கவும் மோதவுள்ளன. இப்போட்டிகள் பாசையூர் சென் அன்ரனிஸ் மைதானத்தில் பிற்பகல் மூன்று மணிக்குஇடம்பெறும்.

ஃ

வி.பு.மாணவரமைப்பினால் மாணவர்களின் நலன் கருதி சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் நடைபெற்றுவரும் மதி மாணவர் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் 02-03-94 இன்று மாலை 4-30 மணிக்கு மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஃ

(கொழும்புத்துறை)

யாழ் சென்சாள்ஸ் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று 2ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி பி. எஸ். சின்னத்துரை தலைமையில் இடம் பெறும்.


யாழ்ப்பாண மாநகரசபை

**வரியிறுப்பாளர்களுக்கானவேண்டுகோள்**

சமீபகால அசம்பாவிதங்கள், இராணுவ நடவடிக்கைகள், விமானத்தாக்குதல்கள் காரணமாக யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாக பெரியகடைப் பகுதியில் பாதிப்படைந்த கடைகள், கட்டிடங்கள் போன்றன எமது அங்கீகாரமின்றி திருத்தம் செய்யப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மாநகரசபை எல்லைக்குள் புதிய அமைப்பு வேலைகளையோ அல்லது திருத்த வேலைகளையோ ஆரம்பிப்பதற்கு முன்னர் மாநகரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்.
28-02-1994

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.
(சி-8744)



யாழ்ப்பாண மாநகரசபை

**கேள்வி அறிவித்தல் - 1994**

**விடுமுறைச் சந்தை**

இடம் - மின்சாரநிலைய வளவு

மேற்குறித்த விடயம் தொடர்பான 18-02-94-ம் திகதிய விளம்பரத்தின் பிரகாரம் பின்வருமாறு கால எல்லைகள் நீடிக்கப்படுகின்றன:-

படிவம் வழங்கும் இறுதித் திகதி: 09-03-94 பிற்பகல் 3-00 மணி

படிவம் ஏற்கும் இறுதித் திகதி: 11-03-94 நண்பகல் 12,00 மணி

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்.
28-02-94

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.
(சி-8741)

## போதைவஸ்துக்கு வருடம் 20 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

''இலங்கையில் உள்ள போதைவஸ்துப் பிரியர்கள் வருடாந்தம் போதைவஸ்துப் பாவனைக்காக சுமார் இருபது கோடி ரூபாவைச் செலவு செய்கின்றனர்''. இவ்வாறு இலங்கைப் போதைவஸ்துக் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய இவர் போதைவஸ்துப் பாவனையைத் தடுப்பதற்கு புதிய சட்டவிதிகளை அமுல்படுத்துவதன் அவசியம் குறித்து எடுத்து விளக்கினார்.

இலங்கையில் சுமார் 50,000 பேர் இப்போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதில் பெரும்பாலானோர் இளைஞர்கள் என்றும் அவர் தெரிவித்தார். போதைப்பொருள்களுக்கு வருடாந்தம் செலவிடப்படும் பணம் சுகாதார அமைச்சின் வருடாந்த செலவீட்டையும்விட அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

## பேராதனை மாணவர் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக மாணவர் போராட்டம் விரிவடைந்து செல்வதுடன் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் பரவி வருவதாகத் தெரியவருகின்றது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேற வேண்டும் என பல்கலைக்கழகம் கொடுத்த தடையைத் தாண்டி தொடர்ந்து மாணவர்கள் அங்கு இருப்பதாகவும் எழுநூறு மாணவர்கள் தொடர்ந்து உபவேந்தர் அலுவலகத்தைமுற்றுகையிட்டிருப்பதாகவும் ஆயிரத்து ஐந்நூறுக்கு அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழக வளவுக்குள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்றுமுன்தினம் இரவு பதினைந்து பொலிஸ் ஜீப் வண்டிகளில் உபவேந்தர் அலுவலகம் நோக்கி பொலிஸார் வந்ததாகவும் மாணவர்களின் கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து அவர்கள் பின் வாங்கியதாகவும் பல பஸ் வண்டிகளில் பொலிஸார் விஜேவர்த்தன மண்டபம் அருகேஇருந்ததாகவும் பின்னர் தாமாகவே விலகிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவருக்கு உணவு வழங்கிய உணவுச்சாலை பொலிஸ ரினால் உடைக்கப்பட்டு அங்கிருந்து உணவுப் பொருள்களை பொலிஸார் எடுத்துச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஏனைய பல்கலைக் கழகங்களுக்கும் பரவத் தொடங்கியுள்ளதாகவும் களனி பல்கலைக்கழக மாணவர்கள் இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து அடையாளப் பகிஷ்கரிப்பையும், உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டுள்ளதாகவும் பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தீக்காயம்; பெண்மணி மரணம்

பருத்தித்துறை கொட்டடியில் தீக்காயங்களுக்கு இலக்காகி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண்மணி பின்னர் மரணமானார்.

இரத்தினேஸ்வரி - சிவானந்தன் என்ற குடும்பப் பெண்ணே மரணமானவர் ஆவார்.

(யோ)

# ஐ. தே. கவினரைப் போல புலிகளை வளர்க்க விரும்பவில்லை

## மேல் மாகாண முதல்வர் சந்திரிகா

(கொழும்பு)

தென் மாகாணசபைக்கான தேர்தலை வெறுமனே பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான ஒரு தேர்தலாகமட்டும் கருதி வாக்களிக்க வேண்டாம் எமது நாட்டின் எதிர்காலத்தையும், எமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு இத் தேர்தலில் வாக்களிக்க வேண்டுமென்று மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், தமது கட்சி தொலைநோக்கு அரசியல் கொள்கையுடன் செயற்பட்டு வருவதாகவும், கட்சி மிகவும் தெளிவானபாதையில் செல்வதாகவும் தமது கட்சியின் கொள்கைகளுக்கு உள்நாட்டு வெளிநாட்டு புத்திஜீவிகளிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தமிழர்களுக்கு பிரச்சினை இருக்கிறது. என்பதை தனது கட்சி ஏற்றுக் கொள்கிறது. என்றும், இது பயங்கரவாதப் பிரச்சினை அல்ல என்றும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தமிழர்களின் பிரதிநிதிகளுடன் மட்டுமே பேச்சு நடத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும் ஐ.தே.காவினர் தான் புலிகளுக்கு ஆயுதமும் நிதியும், சிமெந்தும் கொடுத்து வளர்த்தனர் நான் புலிகளுக்கு அவ்விதம் பால் வார்க்கப் போவதில்லை விடுதலைப் புலிகள்வளர்வதை நான் விரும்பவில்லை என்றும் இனப்பிரச்சினையை ஆக்கபூர்வமான முறையில் தீர்க்கவே விரும்புகிறேன் எனவும் குறிப்பிட்டார்.

தென்னிலங்கையில் பத்து வீட்டுக்கு ஒருவர் என்ற வீதத்தில்இன்று காணாமற் போயுள்ளனர் என்றும் ஐந்து வீட்டுக்கு ஒருவர் கொலை மிரட்டல்கடிதம்பெற்றிருப்பதாகவும்சுமார்24,000ற்கும் அதிகமான பட்டதாரிகளும்லட்சக்கணக்கான ஆற்றலுள்ளோரும் வேலையற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## உடுநுவரவாசிகளுக்கு விசேட சலுகை

(கொழும்பு)

இன்றுஉடுநுவர பகுதியைச் சேர்ந்தோர் என்ன குற்றம் புரிந்தாலும் மன்னிப்பு கிடைக்கிறது என்று பாராளுமன்றத்தில் சுதந்திரகட்சி எம்பியான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

வெளிநாட்டிலிருந்து சீரகம் இறக்குமதி செய்ய போலியான விலைப்பட்டியல் ஒன்றைக் கொடுத்த இறக்குமதியாளர் ஒருவர் சுங்க அதிகாரியால்தண்டிக்கப்பட்டுஅபராதமும் விதிக்கப்பட்டார். ஆனால் பிரேமதாசா யுகம் மறைந்ததும் உடுநுவரவைச் சேர்ந்த இவர் சலுகைகளைப் பெற்றுள்ளார் எனவும் சுட்டிக்காட்டினார்.

## பல்கலைக்கழக நெருக்கடி கருத்துகூற அதிகாரிமறுப்பு

(கொழும்பு)

தென்னிலங்கைப்பல்கலைக் கழகங்களில் தற்போது தோன்றிவரும் சூழ்நிலை தொடர்பாக பல்கலைக்கழக உயர் அதிகாரிகளோ, அன்றி பல்கலைக்கழக மானியக் குழுவோ ஆணைக்குழுவோ கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

பல்கலைக்கழகங்களில் தற்போது நடைபெற்றுவரும் பிரச்சினைகள் மேலும் விரிவடைந்து பல்கலைக்கழகங்களை செயற்பட விடாது மூடவேண்டிய நிலை ஏற்படும் என்றும், எனவே இதனைத் தடுக்க உடனடியாக இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடல் வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களின் உயர் அதிகாரிகள், அல்லது பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு மாணவர்களுடன் பேச்சுக்களில் உடன் ஈடுபடுவதே நன்மை பயக்கும் எனவும் மேலும் கூறப்படுகின்றது.

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான பெப்ரவரி மாதக்கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுவதாக அதன் முகாமையாளர் திரு து வசந்தகுமார் அறிவித்துள்ளார். (22


### ஜேர்மன் சமஷ்டி குடியரசின் நிதி உதவியுடன்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (ரி. ஆர். ஆர். ஓ.)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இணைந்து

நடாத்தும்

ஆண், பெண் இருபாலாருக்குமான

### "விவசாய பயிற்சி நெறிகள்"

- பொதுவிவசாயம்
- ஒட்டுமுறை செய்கை (பழமர விருத்தி)

ஆரம்பமாகின்றன.

தகைமை:- க. பொ. த. (சாதாரண தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

காலம்:- 03 மாதங்கள்
சனி, ஞாயிறு நாட்களில் மட்டும் பயிற்சி நடைபெறும்.

குறிப்பு: இடம் பெயர்ந்த 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 05.03.94 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்விச் சான்றிதழ், அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களுடன் கீழ்காணும் விலாசத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

**ரி. ஆர். ஆர். ஓ. உப காரியாலயம்**
மானிப்பாய் வீதி,
உரும்பராய். (சி 8740)



## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
# ஓய்வு பெறும் அதிபர் திரு. நா. கந்தசாமி அவர்களின்
## சேவை நயப்பு

அடக்கமும் பண்பும்



வாழிய நீடு

## அடக்கமும் பண்பும் ஒருங்கிணைந்த அதிபர் இவர்

ஈழத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பழம் பெரும் கல்லூரிகளில் ஒன்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரி. பல்துறைப்பட்ட கல்விப் பாரம்பரியத்தை உருவாக்கிய சிறப்பு இக்கல்லூரிக்கு உண்டு இங்கு கடமைபுரிந்த அதிபர்களில் ஐ. பி. துரைரத்தினம் அவர்களின் வாரிசு போன்று திகழ்ந்தவர் அதிபர் நா. கந்தசாமி அவர்கள் இக்கல்லூரியிலேயே கல்வி கற்றும் ஆசிரியராகியும் யூனியன் கல்லூரிப் பௌதிகப் பகுதியை வளர்த்துப் பெருமைபெற்றதோடு விளையாட்டுத்துறை, இந்து சமய வழிபாட்டுத்துறை ஆகியவற்றை மேலோங்க வைத்தவர்: நிதானம், விவேகம், இரண்டுமே இவருடைய அதிபர் பதவிக்கு மெருகூட்டியதெனலாம். பத்து ஆண்டுகள் என்னுடன் சக ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் இவருடைய தனித்துவத்தை நான் நன்கு புரிந்து கொண்டேன். ஒய்வுபெறும் அகவையை அடைந்த இவருடைய எதிர்காலம் முழுமையான சமூகப் பணிகளுக்குப் பயன்படும் என நம்புகிறேன். இந்நேரத்தில் அதிபர் கந்தசாமி அவர்களின் உயரிய பணிகளை நெஞ்சிருத்தி வாழ்த்துவோம்.

தங்கம்மா அப்பாக்குட்டி

## வியத்தகு ஆளுமையாளர்

இன்று தனது அறுபதாவது வயதைப் பூர்த்தி செய்து ஓய்வுபெற்றுச் செல்லும் எமது அதிபர் திரு. நா. கந்தசாமி அவர்களைப் பள்ளிப்பருவத்திலே சிறந்த ஒரு மாணவனாகவும், இளமைப் பருவத்திலே புகழ்வாய்ந்த ஒரு ஆசிரியராகவும், முதுமைப் பருவத்திலே போற்றுதற்குரிய அதிபராகவும் காண்பதற்கு யான் என்ன தவப்பயன் செய்தேனோ என யூனியன் தாய் பெருமைப்படும் இன்றைய நாளில், இக்கல்லூரியின் இந்த நூற்றாண்டு வரலாற்றில் அறுபது வயதுவரை சேவையாற்றியபின் ஓய்வுபெறும் முதலாவது அதிபர் யானே என்ற பெருமையோடு இளைப்பாறும் எமது அதிபரைப் பாராட்டுவதில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

நாட்டின் போர்க்காலச் சம்பவங்களினால் கல்லூரிக்கு ஏற்பட்ட சேதங்கள் காரணமாக யூனியன் கல்லூரிக்கு மூடுவிழாவா! என்று நாமெல்லாம் ஏங்கி நின்றவேளை தனக்கென உரித்தான சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளும் வியத்தகு ஆளுமையினால் இக்கல்லூரியின் புகழை மங்காது பாதுகாக்க வழிவகுத்த பெருந்தகையின் வாழ்வு சிறக்க வாழ்த்துகிறேன்.

பொ. கமலநாதன்
பிரதி அதிபர்

(7650)



## நெஞ்சில் மணக்கும் உங்கள் நினைவு

இந்துப் பணியே என் பணியாம் என
இனிய நற்சேவை புரிந்த அதிபரே,
உங்கள் உற்சாக நடவடிக்கைகளினால்
எங்கள் மன்றம் வளர்ச்சி கண்டதுவே!
காலத்தின் தேவையால் ஓய்வுபெறும் நீங்கள்
ஞாலத்தில் அமைதியாய் வாழ்ந்திட வேண்டும்!
நெஞ்சில் மணக்கும் உங்கள் நினைவுடன்
தஞ்சாது பணியாற்றும் எங்கள் மன்றம்

—இந்து மன்றம்—

## சேவையின் செம்மலே நீடு வாழி!

யூனியன் மாதாவின் அதிபர் அவர்கள் பல இன்னல்களின் மத்தியிலும் எம் கல்விப் பணியும் பிற பணிகளும் மிக உன்னதமான வழியிலே இடையீடின்றித் தொடர வழிசமைத்தமைக்கும். எமக்குப் பெருஞ் சேவை ஆற்றியமைக்கும் நாம் என்றென்றும் நன்றி உடையோம். அவர் நீடூழி வாழ வேண்டும் எனக் கலை மாணவர் நாம் வாழ்த்துகிறோம்.

— கலை மாணவர் மன்றம் —

## இனிதாய் மலரட்டும்

எமது கல்லூரியில் 25 வருடங்கள் கடமையாற்றி அதிபராக இன்று ஒய்வுபெறும் திரு. நா. கந்தசாமி அவர்களின் காலத்திலே தான் எமது தமிழ் மன்றம் மீள அமைக்கப்பெற்றது. அவரது தமிழார்வத்திற்கு இது சான்று அவரது ஒய்வு அகவைகள் இனிதாய் மலர வாழ்த்துகிறோம்.

தமிழ் மன்றம்

## எதிர்காலம் சிறக்கட்டும்

யூனியன் கல்லூரியில் ஆசிரியராய் அதிபராய் 25 வருடங்கள் கடமையாற்றி இன்று ஒய்வுபெறும் திரு. நா. கந்தசாமி அவர்களின் சேவையைப்பாராட்டுவதோடு அவரின் எதிர்காலச் சிறப்பிற்கு வாழ்த்துகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## யூனியன் கல்லூரியின் ஒளி விளக்கு

யூனியன் கல்லூரியின் சிற்பி என விளங்கிய உயர்திரு. ஐ. பொ. துரைரத்தினம் அவர்களின் அன்பிற்கு உரிய மாணவராக விளங்கியவர் திரு. நா. கந்தசாமி அவர்கள் யூனியன் கல்லூரியில் அமைக்கப்பெற்ற முதலாவது மாணவ தலைவர் அமைப்பில் இவரும் ஒரு மாணவ தலைவராக விளங்கினார்.

புகழ்மிக்க அதிபராக விளங்கிய திரு. கே: கிருஷ்ணபிள்ளை அவர்களின் காலத்தில் ஆசிரியராக நுழைந்த இவர் திரு. ரீ- என். நடராஜா அதிபர் காலத்தில் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக இருந்து கல்லூரிக்குப் புகழ் சேர்த்தவர். திரு. க. பாலசுந்தரம் அதிபராக இருந்த காலத்தில் சிறந்த ஆசிரியராக விளங்கியவர். திரு. என் புஷ்பநாதன் அதிபராகக் கடமையாற்றிய போது இவர் உதவி அதிபராகக் கடமை புரிந்து சிறப்புற்றவர்.

திரு. நா. கந்தசாமி அவர்கள் இக்கல்லூரி இடம் பெயர்ந்து பெரும் கஷ்டத்திற்குள்ளான காலத்தில் அதிபராகக் கடமையேற்று புதிய இடத்தில் கல்லூரி மீண்டும் புதுப் பொலிவு பெற அயராது உழைத்தார். இன்று இவர் இளைப்பாறினாலும் பழைய மாணவர் சங்கத்திலும் கல்லூரியிலும் தொடர்ந்தும் உழைப்பதற்கு இவருக்கு நீண்ட சுகமான ஆயுளை தர இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறோம்.

பழைய மாணவர் சங்கம்

## வாழிய நீடு

மங்காப் புகழ் படைத்த யூனியன் கல்லூரி புகழ் பூத்த சில அதிபர்களைக் கண்டது. நிர்வாகத் திறமை படைத்த அமரர் ஐ பொ. துரைரத்தினம் அவர்கள் எமது கல்லூரியின் சிற்பி. அவரின் பின் வந்த அதிபர்களின் வரிசையில் இன்று ஓய்வுபெற்றுச் செல்லும் திரு. நா. கந்தசாமி அவர்கள் தனது குருவான ஐ; பொ. துரைரத்தினம் அவர்களின் அடியொற்ற முனைந்தவர். எமது கல்லூரி அரசியல் கரங்களால் அலைப்புற்ற இக்காலத்தில் தன் திறமையை காட்டிக் காத்தவர். ஆசிரியர்களோடும் மாணவரோடும் அன்பாகவும் இதமாகவும் பழகும் இவரின் ஓய்வு காலம் அமைதியும் பயனும் வாய்ந்தாக அமைய வாழ்த்துகிறோம். வாழிய நீடு.

ஆசிரிய கழகம்

## வெண்மை அவர் தன்மை

வெண்மை அவர் தன்மை நாம் வேட்கும் வியன் அதிபர்,
தண்மை தரு பார்வை, பெருந்தருவாய் மிகு நேர்மை,
எம்மை எம் அறிவை, எழில் யூனியன் தாயை
நன்மை வழி காட்டி நடத்திச் சென்ற வேந்தர்,
மெய்ஞ்ஞானம் எமக்களித்த மேன்மைமிகு அதிபர் - அவரை
விஞ்ஞான மன்றத்தார் நாம் விசேட மலர் தூவி,
வாழ்த்துகிறோம், வாழ்த்துகிறோம், வாழிய நெடுங்காலம் என்றே.

— விஞ்ஞான மன்றம் —

## உயரட்டும் அவர் புகழ்

வாழும் தெல்லியூர் அதுவும், வளர்ந்து வரும் யூனியனும்
நாளும் மறவாது எம் கந்தசாமி அதிபர் தன்னை
உயரட்டும் அவர் புகழும் உயரிய நற்பண்புகளும்
உயர்தர மாணவரின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

— உயர்தர மாணவர் மன்றம் —

## நேச அலை சுமப்போம்

வளமுடன் எங்கள் வணிக மன்றம் வளர்ந்து புகழ் பரப்ப
களம் அமைத்தே உதவிக்கரம் தந்து கருத்தாலான எம் அதிபரே,
நீங்கள் இளைப்பாறிவிட்டாலும் எம் மன்றம்
நெஞ்சிலே நேச அலையைச் சுமந்துவரும்!

— வணிக மன்றம் —

சிந்தனைக்கு

போருக்கு ஆயத்தமாக இருப்பதே
சமாதானத்தைப் பாதுகாக்க பயனான வழி

- ஜோர்ஜ் வோஷிங்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## சமாதான சமிக்ஞை அரசு காட்டுகிறதா?

வடபகுதிக் கடற்பரப்பில் மீன்பிடிக்க சிறிலங்கா அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதாக வெளிவந்த அரச தரப்புச் செய்தியானது பல தரப்பட்ட ஊகங்களுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளாகியுள்ளது. இதேவேளை, இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அரச அதிகாரி ஒருவர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நோக்கிலேயே இத்தடைச் சட்டம் நீக்கப்பட்டதாகக் கூறியதாக வெளிநாட்டு செய்தி ஸ்தாபனம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஆனால், இது அதிகாரி கூறியதுபோல் சமாதானத்திற்கான சமிக்ஞையா என்பதில் நிறையவே சந்தேகங்களும், கேள்விகளுமே உள்ளன. முதலில், இப் பாதுகாப்புத் தடைச் சட்டம் நீக்கம் தொடர்பாக இதுவரையில் அரசாங்கம் உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதையும் விடவில்லை. அதாவது, அரச தரப்பு அறிவிப்பு எனக் கூறப்பட்டுள்ளதே தவிர இது தொடர்பாக ஜனாதிபதியின் அறிவிப்பு எவையும் இதுவரை வெளிவரவில்லை. இத்தடைச்சட்டம் அவசர கால விதியின் கீழ் ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்டதினால் இதனை நீக்குவதற்கு ஜனாதிபதியின் அறிவிப்பு அவசியமானதாகும்.

அத்தோடு, கடல்வலயத் தடைச்சட்டம் நீக்குவதாக வெளிவந்துள்ளபோதும் இது தொடர்பாக ஏனைய விபரங்கள் எவையும் இன்னமும் அறிவிக்கப்பட்டதாக இல்லை. அதாவது தடைபோடப்பட்ட போது இருந்த தெளிவான வரையறை எதுவுமில்லை இது தொடர்பான விபரங்கள் பற்றி அரச அதிகாரிகள் மட்டத்திலேயே குழப்பம் நிலவுகின்றது.

இதேவேளை, இக் கடல்வலயத் தடைச்சட்டத்தின் காரணமாக இந்திய - சிறிலங்கா உறவிலும் சில நெருடல்கள் எழுந்தமை இத் தடைநீக்கத்திற்கு காரணமாகலாம் ஏற்கனவே கச்சதீவு விவகாரத்தில் தமக்குரிய உரிமையை சிறிலங்கா மறுப்பதாக இந்தியத் தரப்பில் கருத்து நிலவுகின்றது. அத்தோடு, அண்மைக் காலத்தில் தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காவதும், பலர் மரணமடைவதும் இந்தியாவிற்கு சிறிது அதிருப்தியைத் தோற்றுவித்தும் உள்ளது.

# இராணுவ பொருளாதார முற்றுகையை தளர்த்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சியுங்கள்

## - வெகுஜன அமைப்புகள் ஒன்றியம் அரசுக்கு மகஜர்

எல்லா வகையான பொருளாதாரத் தடைகளும் முற்றாக நீக்கப்பட்டு அனைத்துப் பொருள்களும் எடுத்து வரப்படுவதை சுமுகமாக அனுமதிக்க வேண்டும். நுகர்வோருக்கான அனைத்துப் பொருள்களினதும் விலைகள் ஏனைய இடங்களில் இருப்பதைப் போலவடபகுதியிலும் பேணப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் கப்பல் கட்டணத்தில் இருந்து விலக்களிக்க வேண்டும். இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியிலிருந்துபடையினர் வெளியேறி இடம் பெயர்ந்த அனைவரும் தத்தம் இடங்களுக்கு திரும்பக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். விடுதலைப் புலிகள் காட்டியுள்ள நல்லெண்ண சமிக்கைகளை உரிய வகையில் கௌரவித்து அதற்கு ஏற்றவகையில்பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு யுத்த நிறுத்தம் ஏற்பட வகை செய்தல் வேண்டும். என்ற நான்கு கோரிக்கைகளையும் வலியுறுத்தி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளது.

யாழ்ப்பாணஅரசாங்க அதிபருககு ஊடாக ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டஇந்தமகஜரில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

இந்த நாட்டின் எதிர்கால நலன்கருதி பல்வேறுதொண்டர் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், இன்னும் தொழிற் சங்கங்கள் சமய, சமூக நிறுவனங்கள் என்பன இணைந்துள்ள வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் பின்வரும் விடயங்களை தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறது.

தற்போதைய நெருக்கடி நிலையானது காலவரம்பின்றி நீண்டு செல்வதானது தமிழ் மக்களைப் பெரிதும் பாதிப்பதாகவுள்ளது என்பதுடன் மிகவும் வெறுப்படையவும் செய்துள்ளது.

60,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதுடன், எண்ணுக்கணக்கற்றோர் அநாதைகளாக்கப்பட்டும், விதவைகளாக்கப்பட்டும் இருக்கின்றனர். ஆயிரக்கணக்கானோர் உடல் ஊனமானவர்களாக்கப்பட்டும் உளவியல் தாக்கங்களுக்கு பெரும்பாலானோர் உள்ளாக்கப்பட்டும் இருக்கின்றனர்.

பொருளாதார நடவடிக்கைகளில் விதிக்கப்பட்டிருக்கும் முற்றுகையானதும், போக்குவரத்துக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதும் விடுதலையின் அவசியத்தை தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் அறிவுறுத்துவதாகவே இருக்கிறது.

போரில் வெல்லப்பட முடியாத சூழ்நிலையில் தமிழ் மக்கள் மீது சுமைகள் ஏற்றப்படுவது ஆட்சியாளரின் அடக்குமுறைகளை புலப்படுத்துகின்றது. கேந்திர முக்கியம் வாய்ந்த இடங்களை இராணுவம் ஆக்கிரமித்துள்ள போதும்கூட விடுதலைப்போராட்டத்தினை நசுக்க முடியவில்லை என்பதையும், கௌரவத்தோடு வாழவிரும்பும் மக்களின் எண்ண வேட்கையையும் அடக்க இயலவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நடவடிக்கைகள் விடுதலைப்போராட்டத் தீயை மேலும் வளர்த்திருப்பதை அவதானிக்க வேண்டும்.

இவை அடக்கு முறைக்கு எதிராக எத்தகைய தியாகத்தையும்செய்யத் தூண்டுவதாக இருப்பதுடன்சொந்தநிலத்தின் மீதான உரிமைகளைப்பேணும் ஆவலையும் வளர்க்கின்றது.

இது சிங்களவர்களுக்கு எதிரானது அல்ல பதிலுக்கு சமாதானமானவகையில் அயலவர்களாக கௌரவத்தோடும், பாதுகாப்புடனும் தமிழர்கள் வாழவிரும்புவதன் வெளிப்பாடாகும்.

பெரும்பான்மையினர் என்னும் மரத்தில் பற்றிப் படரும் கொடிகளாக சிறுபான்மையினரை வர்ணிக்கும் பெரும்பான்மையின அரசியல் வாதிகளின் சொற்கள் அவர்களுக்கு இந்நாட்டின் வரலாற்றிலும், மக்கள் சமூகத்தினதும் தனி நபர்களினதும் பெறுமதி தொடர்பாக உலகின்பொதுப் போக்குபற்றியும் இருக்கும் அறிவுக்குறைவையே எடுத்துக்காட்டுகின்றது.

இந்த நாடு பொருளாதார ரீதியில் நலிவடைந்துபோய்க் கொண்டும் கடன்களுக்குள் தலைகீழாக விழுந்தும் வருகிறது. சட்டங்கள் கட்டுப்படுத்தாத ஆயுதங்களும் கட்டுப்பாடற்ற போக்குகளும் ஆபத்து அதிகரித்துச் செல்வதை வெளிப்படுத்துகிறது.

எனவே தான் நாட்டின் எதிர்கால நலன் என்ற பொதுக் கருத்தின் அடிப்படையிலும் உலகளாவியமனித உயிர்களின் பெறுமதியின் பேரிலும் இப்போதைய யுத்தம் நிபந்தனையின்றி நிறுத்தப்படல் வேண்டும் என்பதுடன் இணக்கமான தீர்வொன்றைக் காணும் அணுகுமுறை நேர்மையோடும் சமாதான சூழலில் மேற்கொள்ளப்படல்வேண்டும்

விடுதலைப் புலிகள் இதுவரை காட்டியுள்ள நல்லெண்ண சமிக்கைகளை ஆழமான பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு இன்றைய சூழலை சீர்கெடுக்கும் நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ளல்வேண்டும்.

தென்பகுதியில் வாழும் சரியாக சிந்திக்கும் சில சக்திகள் நல்லெண்ண சமிக்கைகளை வரவேற்று கருத்து தெரிவித்திருப்பதை அறிந்து நாம் மகிழ்ச்சி அடைந்துள்ளோம்.

மக்களின் வாழ்க்கைக்கான தேவைகளை பூர்த்தி செய்வதும் எல்லாக் குடிமக்களுக்கும அவர்களது தேவைகள் நியாயமான செலவீட்டில் கிடைக்கச்செய்ய வேண்டியதும் சம்பந்தப்பட்ட அரசின் கடமையே ஆகும்.

போக்குவரத்திற்கு பாதைகளுக்கு கட்டுப்பாடு விதிப்பதும் குறிப்பிட்ட பாதைகளில் இராணுவ பொருளாதார அழுத்தங்களைப் பிரயோகித்து அவற்றிற்கு ஊடாக மட்டுமே பயணம் செய்ய அனுமதிப்பதும் அரசியல், இராணுவ நோக்கங்களை உடையவை ஆகும். இதற்கு உடன்படாமல் விடுவது பொருளாதார முற்றுகையை சுயமாக ஏற்படுத்துவதாக திரித்துக் கூறுவது பட்டினியைத் தீர்ப்பதற்கோ மெதுவாக இறப்பதைதவிர்ப்பதற்கோ உதவப் போவதில்லை.

உணவுப் பொருள்களும், மருந்துப் பொருள்களும் வடபகுதிக்கு தேவையான அளவில் விநியோகிக்கப்படுவதில்லை. உதாரணமாக 90,000 மெ. தொன் அரிசியும்,48,000 மெ. தொன் மாவும், 20,000 மெ. தொன் சீனியும்,15, 000 மெ தொன் பருப்பு வகைகளும் 6, 500000 பக்கெட் பால்மா வகைகளும், 48 000 பரல் தே, எண்ணெயும், 84, 000 பரல் மண்ணெயும் வருடாந்தம் இங்கு தேவைப் படுகிறது'

எனினும் பொருளாதார முற்றுகையின் காரணமாக கூட்டுறவுத் துறையினாலோ தனியாரினாலோ இந்தளவு தொகையை இங்கு கொண்டு வர முடிவதில்லை இதன் விளைவாக பொருள்களின் விலைகள் உயர்வடைகின்றன. ஏற்கனவே வாழ்க்கைக்கான தொழில் வாய்ப்புக்களை மேற்கொள்ள முடியாதிருக்கும் மக்களுக்கு இது மேலதிகச் சுமையாகிறது எல்லா வகையான கைத்தொழில் முயற்சிகளும் மூலப்பொருள்கள் மற்றும் எரிபொருள்கள் என்பவற்றுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதால் பாதிக்கப்பட்டுள்ளது. மீன்பிடிக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், தொழிற்சாலைகளும் உற்பத்திமையங்களும் கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்கு இலக்காகி உள்ளது.

இதன் விளைவாக அத்தியாவசிய நுகர் பொருள்களின் விலைகள் கடந்தமூன்றுமாதங்களிலும் மேலும் அதிகரித்துள்ளது மூன்று மாதங்களுககு தேவையான பொருள்களைக களஞ்சியப்படுத்துவதற்கு வசதியான கட்டிடங்கள் திருத்தப்படவேண்டிய நிலையில் இருககிறது.

இந்த நிலையில் கப்பல் கட்டணத்தையும் இந்த மக்களே சுமக்க வேண்டும் என்னும் அரசின் நிலைப்பாடானது பொருள்களின் விலையை மேலும் ஐம்பது வீதம் அதிகரிகவே செய்யும் பல்வேறு அழுத்தங்களின் அடிப்படையில் இத் தீர்மானம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறோம். இது நிரந்தரமாக நீக்கப்படல் வேண்டும்.

1991 ஜூன் மாதம் முதல் சுமார்80,000குடும்பங்களைச் சேர்ந்த 4,00000 பேர் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து இருக்கின்றனர். இவர்கள் மனித வாழ்க்கைக்கே புறம்பான வகையில் மரங்களின் கீழும், உடைந்த கட்டடங்களிலுமே வாழ்கின்றனர். இவர்கள் இராணுவத்தினர் மீளப் பெறப்படுவதன் மூலம் தத்தம் இல்லங்களுக்கு பாதுகாப்புடன் திரும்பக்கூடிய சூழல் உருவாக்கப்படல் வேண்டும்.

சில பொருள்களின் கொழும்பு விலைகளையும், யாழ்ப்பாண விலைகளையும் இங்கு ஒப்பிட்டுக் காட்டுவது பொருத்தமானது.

| | கொ. விலை | யா. விலை |
|---|---|---|
| அரிசி | 16 00 | 36. 00 |
| மா | 14 00 | 22 00 |
| சீனி | 28. 00 | 45 00-55. 00 வரை |
| சவர்க்காரம் | 7 00 | 9 50 |
| லக்ஸ்பிறே | 59 00 | 75 00 |
| தே எண்ணெய் | 38 00 | 75 00-85 00 வரை |
| மண்ணெய் | 11. 00 | 80.00 |

இது எல்லாப் பிரஜைகளையும் ஒரேமாதிரியாக கணிக்க வேண்டும் என்னும் சர்வதேச விதிமுறைகளுக்கே புறம்பானது.

னரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காவதும், பலர் மரணமடைவதும் இந்தியாவிற்கு சிறிது அதிருப்தியைத் தோற்றுவித்தும் உள்ளது,

இந்நிலையில், இக் கடல்வலயத் தடைச்சட்ட நீக்கமானது சமாதானத்திற்கான அறிவிப்பு எனக் கூறிக் கொள்ள முடியுமா? மேலும், இக் கடல்வலயத் தடைச் சட்டத்தினால் பல மில்லியன் ரூபா பெறுமானமான நிவாரணத்தை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டி உள்ளது. தொடர்ந்து இந்நிவாரணம் வழங்கப்படுவதென்பது அரசைப் பொறுத்து ஒரு பெரும் சுமையாகவே கருதப்படுகின்றது. இந்நிலையில், தடைச் சட்டத்தை நீக்கி விடுவதான அறிவிப்பானது, நிவாரணத்தை வெட்டுவதற்கான ஒரு வழிமுறையாகவும் கருத இடமுண்டு.

ஆனால், இவை யாவற்றையும் கருத்திற் கொள்ளாது இதனை ஒரு சமாதானத்திற்கான சமிக்ஞையாகவே கருத்திற் கொள்வதாக இருப்பினும், இத் தடைச் சட்ட நீக்கத்திற்கு 24 மணி நேரத்திற்கு முன்னர் யாழ். கடல்நீரேரிப் பகுதியில் இரு மீனவர்கள் சிறிலங்கா விமானப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதையும் ஒருவர் படுகாயப்படுத்தப்பட்டதையும் எவ்வாறு கொள்வது? சமாதானத்தின் முன் அறிவிப்பென்றா?

ஒப்புக்காக கடல்வலயத் தடைச்சட்டம் நீக்கப்படுவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னரேதான் சுடப்பட்டதாகவோ அன்றி யாழ் கடல் நீரேரியில் தடைநீக்குவது பற்றி அரசு அறிவிக்கவில்லை எனக் கூறக்கூடுமாயினும் சமாதானச் சூழல் ஒன்று உருவாவதற்கு இது எத்துணை தூரம் உதவி புரியக் கூடும்? சமாதானச் சூழ்நிலை ஒன்றை அரசு உருவாக்க விளைவதாயின் இவ்வாறான தாக்குதல்களை நிறுத்துவது என்ன கடினமான காரியமா?

இந்நிலையில், கடல்வலய தடைச்சட்டம் நீக்கம் என்ற அறிவிப்பானது, சமாதானத்திற்கான சமிக்ஞை என்பதை விட வேறு நோக்கங்கள் கொண்டது என்பதே பொருத்தப்பாடானதாகும். இதற்கு இன்று இனப்பிரச்சினை தொடர்பாகவும் எழுந்துள்ள சில அழுத்தங்களும், கடல் தடைச்சட்டம் தொடர்பாக இந்தியத் தரப்பில் இருந்து வெளியிடப்படும் அதிருப்தியும் சிறிலங்காவின் பொருளாதார நிலையுமே இத்தடைச் சட்ட நீக்கத்திற்கு முக்கியமான காரணமாகக் கொள்ள முடியும்.

ஆனால், இதனை ஒரு சமாதானத்திற்கான சமிக்ஞையாகக் காட்டுவதினால் அரசிற்கு சில அனுகூலங்கள் உண்டு. இந்நிலையிலேயே இத்தடை நீக்கத்தை ஒரு கல்லில் பல மாங்காய் என்ற ரீதியில் பயன்படுத்த அரசாங்கம் எண்ணுவதாக கருத இடமுண்டு. இந்நிலையில், இதனை சமாதானத்திற்கான ஒருசமிக்ஞை எனக் கொள்வது பொருத்தப்பாடான தொன்றல்ல என்றே கூற வேண்டும்.

...யவும் செய்துள்ளது.

60,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதுடன்,

லும், மக்கள் சமூகத்தினதும் தனி நபர்களினதும் பெறுமதி தொடர்பாக உலகின்பொதுப்

மதிப்பதும் அரசியல், இராணுவ நோக்கங்களை உடையவை ஆகும். இதற்கு உடன்

இது எல்லாப் பிரசைகளையும் ஒரேமாதிரியாக கணிக்க வேண்டும் என்னும் சர்வதேச விதிமுறைகளுக்கே புறம்பானது.

# உயர் அதிகாரிகளின் முரண்பாட்டில் கொத்தலாவல பழிவாங்கப்பட்டாரா?

(கொழும்பு)

அமெரிக்காவின் இராணுவ பயிற்சிக் கல்லூரியிருந்து வெளியேற்றப்பட்டு சிறிலங்காவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட லெப். கேணல் கொத்தலாவல இராணுவ சேவையிலிருந்துநீக்கப்பட்டமையின் பின்னணியில் உயர் இராணுவ அதிகாரிகளுக்கிடையேயான முரண்பாடுகளே காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரத்தில் ஜனாதிபதியினால் இராணுவத் தளபதி ஜெரி. டி சில்வா அழைக்கப்பட்டு கட்டாய லீவில் விடப்பட்டிருக்கும் லெப். கேணல் கொத்தலாவலவை இராணுவ சேவையிலிருந்தே விலக்கும்படி பணிப்புரை விடுக்கப்பட்டதும் அதையடுத்து ஒரு மணி நேரத்தில்பாதுகாப்பு அமைச்சின் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டதும், அது வானொலி, தொலைக்காட்சியில் முக்கிய இடம் பெற்றதும்தெரிந்ததே.

கொத்தலாவல இராணுவ சேவையில்மேஜர் தரத்தில் தனது பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்யும்நிலை ஏற்பட்டபோது முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்க அவரை பதவியிலிருந்து விலகும்படி கேட்டுக கொண்டார். நவம்பர் 1991 அளவில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் கொத்தலாவல பதவியிலிருந்து கட்டாய ஒய்வு பெறுமாறு அறிவுறுத்தப்பட்டதையடுத்து அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த வேளையில் மேஜர் தரத்தில் தனது காலத்தைப் பூர்த்தி செய்யும் வரை அவர் சேவையாற்ற அனுமதிக்கும்படி பணிப்புரை விடுத்திருந்தார்.

பின்னர் ஹமில்டன் வணசிங்கா இராணுவ தளபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்று அப்பதவிக்கு சிசில் வைத்தியரட்ணாவினால் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொத்தலாவலவிற்கு லெப். கேணலாக பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன் அவருக்கு அமெரிக்காவில் புலமைப்பரிசிலும் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பெப்ரவரி ஏழாம் திகதியன்று நாடு திரும்பிய கொத்தலாவல இராணுவ சட்டப்பிரிவின் முன் பெப்ரவரி ஒன்பதாம் திகதியன்று தோன்றி தன்நிலை விளக்கமளித்ததை தொடர்ந்து விசாரணை முடியும் வரை கட்டாய லீவில் இருக்குமாறு கோரப்பட்ட போதும் இராணுவ வாகனம் பாவிப்பது உட்பட அவருக்கு பல வசதிகளும் அளிக்கபபட்டிருந்து.

எனினும் அவுஸ்திரேலியா, கனடா அல்லது பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு பயிற்சிக்கு சென்ற எவரேனும் கொத்தலாவல அங்கு நடந்ததைபோலநடந்திருப்பின் முதலாவது சந்தர்ப்பத்திலேயே தண்டிக்கப்பட்டிருப்பர் என்பதுடன் அவர்களது சொந்த இராணுவத்திலிருந்தும் விலக்கப்பட்டிருப்பர் என்றும், கொத்தலாவலவிற்கு அமெரிக்க கல்லூரி முதல் தடவையில் மன்னிப்பு அளிததை யும் அவர் கௌரவிக்கவில்லை என்றும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு சுட்டிக் காட்டப்பட்டதையடுத்தே அவர் கடுமையான உத்தரவைப் பிறப்பித்தார் என்றும் மேலும்கூறப்படுகின்றது.

## காஷ்மீரில் நிலை அறிய இஸ்லாமிய தூதுவர்கள்

(டில்லி)

பெல்ஜியம் கிறீஸ், ஜேர்மனி ஆகிய ஐரோப்பிய யூனியனின் தூதர்கள் மேற்கொண்ட விஜயத்தையடுத்து இஸ்லாமிய நாடுகளான ஈரான், சூடான் ஆகிய நாடுகளின் தூதுவர்களும் ஜம்மு காஷ்மீருக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

காஷ்மீர் நிலைமையை இந்தியா கையாளும் முறையை இவர்கள் நேரில் பார்வையிடுவர். அதேசமயம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு ஒன்றும் காஷ்மீர் வரவுள்ளது. இதேசமயம் காஷ்மீரிலும் இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் தீவிரவாதத்திற்கு உதவியளிப்பதை பாகிஸ்தான் நிறுத்த அங்குள்ள பிரிட்டன் தூதுவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியா கேட்டுள்ளது.

காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்ய இஸ்லாமிய மாநாட்டு ஸ்தாபனம் முன் வந்திருப்பதை இந்தியா நிராகரித்துள்ளது.

## அச்சுறுத்தல் ஏற்படின் அமெரிக்கா நடவடிக்கை

(நியூயோர்க்)

அமெரிக்கா தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டாலோ அல்லது ஒரு நாடு நீண்ட தூர அணுசக்தி ஆயுதங்களை தயாரித்தாலோ ஒரு தலைப்பட்சமாக இராணுவ நடவடிககையை மேற்கொளளும் என நியூஸ்வீக்சஞ்சிகை கூறுகிறது

நேட்டோ நாடு ஒன்று தாக்கப்பட்டால் அல்லது பிராந்தியத்தில் நீண்ட தூர அணுஆயுதங்கள் செய்யப்பட்டால் படையினர் பயன்படுத்தப்படுவர் இம்மாதம் ஜனாதிபதி கிளிண்டன் இதுகுறித்த ஆவணத்தில் கையொப்பமிடுவார்.

## பொஸ்னியாவில் பறந்த சேர்பிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

பொஸ்னியாவில் விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்ட வான் பரப்பில் பறந்த நான்கு சேர்பிய விமானங்கள்அமெரிக்காவின் யுத்த விமானங்களால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

தடையை மீறிப்பறந்தமையாலே இந்நான்கு விமானங்களும சுட்டு வீழ்ததப்பட்டதாக நேட்டோ அமைப்பு தெரிவித்தன.

## குவைத் மீது மன்னிப்புசபை கண்டன அறிக்கை

1991ஆம் ஆண்டு வளைகுடா யுததம் முடிவுற்ற பின்னர் மூன்று ஆண்டு காலமாக குவைத் கடுமையான விதத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈராக் துருப்புகள் குவைத்திலிருந்து வாபஸ் பெறறபின் குவைத் படையினரும் பொலிசாரும் ஆயுதமேந்திய சிவிலியன்களும் மனித உரிமைமீறலில் ஈடுபட்டதாக அது கூறுகிறது.

## பொது மன்னிப்பு

ரஷ்ய நாடாளுமன்றம் ஆயுதக்கிளர்ச்சியாளர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது

ஜனாதிபதி யெல்சினுககு எதிராக கடந்த அக்டோபரில் ஆயுதக்கிளர்ச்சியை நடத்தியவர்களுக்கு எதிராக 1991 ஆகஸ்ட்டில் நடை பெற்ற கம்யூனிஸ்ட் சதிப்புரட்சியில் ஈடுபட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கும் தீர்மானம் நிறைவேறியது இப்பிரேரணைக்குஆதரவாக253பேரும் எதிராக 67பேரும் வாக்களித்தனர்

## ரஷ்யா-யூஎஸ் இணக்கம்

சி ஐ ஏ உளவு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் கெடுபிடிப் போர் மீண்டும் ஏற்படும் நிலையை அனுமதிப்பதில்லை என ரஷ்யாவும் அமெரிக்காவும் ஒப்புக் கொண்டுள்ளன.

# ஹெலி சரமாரியாக சுட்ட போது என்னுடன் இருந்தவர் அலறி வீழ்ந்தார்

## தாக்குதலுக்கு தப்பியவர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

வான்பரப்பில் திடீரென வந்த உலங்கு வானூர்தி ஒன்று சரமாரியாக எமது படகை நோக்கி தாக்குதலை நடாத்திய போது என்னுடன் இருந்தவர்கள் அலறித்துடித்தனர், நாம் சிந்தித்து செயலில் இறங்குமுன் உலங்கு வானூர்தி தனது தாக்குதலை நடாத்திவிட்டு சென்றுவிட்டது என நவாலி தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நல்லையா (வயது 49) என்பவர் தெரிவித்தார்.

கேரதீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் மாலை சிறிலங்கா உலங்கு வானூர்தி மீனவர்கள் மீது நடத்திய தாக்குதலில் இரு மீனவர்கள் பலியானதுடன் மேலும் ஒருவர் காயமடைந்ததும் தெரிந்ததே,

இச்சம்பவத்தின் போது மயிரிழையில் உயிர் தப்பிய நல்லையா என்பவர் சம்பவம் பற்றி விபரிக்கையில் தனங்களப்பில் இருந்து சுமார் ஏழு மைல் தூரம் வரை படகொன்றில் நானும் மேலும் மூவருமாக சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தோம். அப்போ திடீரென வானை நோக்கிய போது உலங்கு வானூர்தி ஒன்று எமக்கு நேரே மேலாக சுமார் ஒரு பனை உயரத்தில் நிற்பதைக் கண்டோம். கடற்காற்றின் சத்தத்தால் உலங்கு வானூர்தி வருவதை எம்மால் அறிகக முடியவில்லை.

நாம் எம்மை மீனவர் என இனம்காட்ட முயற்சித்த வேளை சரமாரியான குண்டுகள் எமது படகிற்குள் தீப்பிழம்பாக வந்துவீழ்ந்து வெடித்தன.

அவ்வேளை படகில் இருந்தவர்கள் அலறியவாறு துடிதுடித்ததை என்னால் காண முடிந்தது. உலங்கு வானூர்தி சென்ற பின் பார்த்த போது ஆறுமுகம் செல்லையாவின் உடலில் இருந்து இரத்தம் வடிந்த நிலையில் அவர் அசைவற்றுக் கிடந்தார். நடராசா என்பவர் குற்றுயிராக உடல் எங்கும் சூட்டுக் காயங்களுடன் கிடந்து துடிதுடித்தபடி கிடந்தார். அவரை அணுகி என்னுடன் சேர்த்து அணைக்க நான் முற்பட்ட போது அவர் திடீரென அசைவற்று வீழ்ந்தார். அவரும் இறந்துவிட்டதை உணர்ந்து கொண்டேன். மற்றவரான சிவநேச செல்வன் (வயது34) என்பவர் காயமடைந்தநிலையில் முனகிக் கொண்டிருந்தார். அவரை என்னுடன் அணைத்தபடி அவருக்கு ஏற்பட்ட இரத்தப் பெருக்கை கட்டுப்படுத்த துணிகளால் கட்டினேன்.

அப்போது படகுகளில் ஏற்பட்டிருந்த ஒட்டைகளூடாக நீர் படகினுள் புகுந்த வண்ணமிருந்தது. இதனால் செல்வனை கைத்தாங்கலாக பிடித்தபடி மறுகையால் எனது சாரத்தை கிழித்து அதனைச் சுற்றி ஒட்டைகளை அடைத்தேன். பின்னர் சக படகுகளின் உதவியை நாடி கரையை வந்தடைந்தேன் என்றார்.

## கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கென யாழ். பிறவுண் வீதி, இல. 81ல் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத் திறப்புவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. ந. தர்மபாலன் தலைமையில் நடைபெறும். (22)

# பேராதனை பல்கலைக்கழகத்துள் பொலிசார் திடீர்ப்பாய்ச்சல்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக வளவுக்குள் பொலிசார் அதிகாலை நான்கு மணியளவில் திடீர் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் இரண்டு மாணவர்கள் படுகாயம் அடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இத் தாக்குதலின் போது சுமார் ஐம்பதிற்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்ததாகவும் அவர்கள் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

பல்கலைக்கழக மாணவர் எதிர்பார்க்காத நிலையில் நேற்றுக்காலை பொலிசார் பல வாகனங்களில் பேராதனைபல்கலைக்கழக வளவுக்குள் உட்புகுந்து அங்கு உபவேந்தர் அலுவலகத்தை முற்றுகையிட்ட மாணவர் மீது குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதில் மாணவர் சிதறி ஓடியதாகவும் அந்த நேரம் பல்கலைக்கழகம் முழுமையான இருள் படர்ந்து இருந்ததாகவும், எனவே மாணவர் எதுவும் செய்ய முடியாத நிலையில் சிதறி ஓடியதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை தற்போது பூரண பொலிஸ் பாதுகாப்பு பேராதனை பல்கலைக்கழகத்திற்கு போடப்பட்டு இருப்பதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# உப்புக் கூட்டுத்தாபன ஊழியர் கவனத்திற்கு

இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களின் கொடுப்பனவு சம்பந்தமாக தலைமைக் காரியாலயத்துடனும் மற்றும் அமைச்சுகளுடனும் தொடர்பு கொள்வதற்காக உயர் அதிகாரி கொழும்பு செல்ல உள்ளதால் அதற்கென தயாரிக்கப்பட்டுள்ள மகஜரில் இதுவரை கையொப்பம் இடாத அனைத்து ஊழியர்களும் தவறாது எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிராந்திய காரியாலயத்தில் சமுகம் கொடுக்கும்படி அறிவிக்கப்படுகின்றனர். தவறுவோர் கொடுப்பனவுகளை இழக்க நேரிடலாம், இதனை எல்லா ஊழியர்களும் கவனத்தில் கொள்ளும்படி வடபிராந்திய உப்பள ஊழியர் சேவைநலச் சங்கம் கேட்டுள்ளது.

# வடக்குகிழக்கு இணைப்பின் எதிர்காலம் முஸ்லிம்கள் கைகளிலேயே உள்ளது

## அஷ்ரப் கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இணைப்பின் எதிர்காலம் எமது கைகளிலேயே உள்ளது. எனவே தமிழ்க்கட்சிகளும்குழுக்களும் இன்னமும் தூங்கி இருக்காமல் இணைப்புக் குறித்து உறுதியான முடிவு எடுக்க வேண்டும். முஸ்லிம்களின் ஆதரவை முறையாகக் கோரினால் இணைப்பிற்காக முஸ்லிம் காங்கிரஸ் முழுமூச்சுடன் களத்தில் இறங்கத் தயார் என இக்கட்சியின் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விஜேதுங்கா இன்று ஆற்றும் உரைகள் தமிழர்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரது உரைகள் தமிழர்களை மட்டுமல்ல தமிழ் பேசும் முஸ்லிம்களையும் அவமானப்படுத்துவதாக உள்ளன எனவும் அவர் கூறினார்.

# இரு பேராசிரியர்களுக்கு ஜனாதிபதி விருது

வடக்குக்கிழக்கு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த இரு பேராசிரியர்களுக்கு 94-ம் ஆண்டிற்கான ஜனாதிபதி தேசிய விருது வழங்கப்படவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் பாரம்பரிய கலைகளில் ஆற்றிய சேவைகளை கௌரவித்து யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோருக்கு தேசிய விருது வழங்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து யாழ். அரசாங்க அதிபருக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சுற்று நிருபம் ஒன்றில் இவர்கள் கலைத்துறையில் ஆற்றிய பாரம்பரிய சேவைகள் பற்றிய விபரங்களை அறிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது (ச)

## வவுனியா

களை நடத்தியதாகவும் படையினரும் பதில்தாக்குதல் நடத்தியதாகவும் அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

## வாகனங்களுக்குரிய

தடவைகள் பத்திரிகை மூலம் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களை பதிவு செய்து கொண்டுள்ளார்கள். பதிவு செய்யாத ஒரு சில வாகனஉரிமையாளர்கள் மீது நாம் மிக மனவேதனையுடன் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முதற்கட்ட நடவடிக்கையாகவே நேற்றுத் தொடக்கம் எமது காவல்துறை உறுப்பினர்கள் வாகனங்களைப் பரிசோதிப்பதில் ஈடுபட்டுள்ளனர். சகல வாகன உரிமையாளர்களும் வாகனங்களில் செல்லும் போது தமது வாகனங்களுக்குரிய ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறு அன்புடன் கேட்கப்படுகின்றனர். முக்கியமாக 1993 ஆம் ஆண்டிற்கான இறைவரி பத்திரத்தையும் எடுத்துச் செல்லுமாறு கேட்கப்படுகின்றனர். இவ்வாறான சட்டரீதியான செயற்பாடுகளை எமது வாகன உரிமையாளர்கள் அறியாதவர்களல்ல, ஆகவே தயவுசெய்து எமது வாகன உரிமையாளர்கள் தங்கள் சிரமத்தைப் பாராது இவ் விட

# சிசிலின் தூதுவர் பதவி ரத்துச்செய்ய கோரிக்கை

(கொழும்பு)

தாய்லாந்திற்கான புதிய சிறிலங்கா தூதுவராக ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவை நியமிக்க எடுத்த முடிவை அரசு நிறுத்திவைக்க வேண்டும்என சுதந்திரக் கட்சி எம்.பி. நிமால் சிறிபால டி சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் இவர் இக்கோரிக்கையடங்கிய கடிதத்தை ஜனாதிபதிவிஜேதுங்காவிற்கு அனுப்பி வைத்தார். சிசில் வைத்தியரட்னாவின் நியமனம் தற்போது உயர் பதவிகளுக்கான பாராளுமன்றக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

## அபாயகரமான

தெரியவந்துள்ளது.

இதேசமயம் சர்வதேசப் பொலிசார் ஹொங்கொங்கில் உள்ள போலி மருந்து தயாரிப்பு இடத்தை கண்டு பிடித்துள்ளனர். இந் நிறுவனத்தின் பெயர்கொண்ட ஒரு தனி அறை மட்டுமே இருந்ததாகவும் பெரிய நிறுவனக் கட்டடம்ஏதும் அங்கு காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போலியான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதை

## பங்கீட்டு

மேற்படி கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள 7000 பரல் மண்ணெண்ணெய் இறக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் இவை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்

# அடையாள அட்டை துரிதமாக்கப் பணிப்பு

கல்வித் திணைக்களங்களில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் திணைக்கள அடையாளமிடப்பட்ட அடையாள அட்டைகளை துரிதகதியில் வழங்குமாறு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல மாகாண, மாவட்ட, கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

சுற்றிவளைப்புகளிலும், இராணுவ பரிசோதனையிலும் இவர்கள் திணைக்கள அடையாள அட்டையின்றி மிகுந்த சிரமத்துக்குள்ளாகுவதனால் இதனை துரிதகதியில் வழங்குமாறு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் அறிவித்துள்ளார். (17)

## கூட்டம்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த வலிகாமம் பிரதேச இணைப்புக் குழுக்களுக்கான சந்திப்புக் கூட்டம் நடப்பு ஆண்டில் ஒவ்வொரு மாதத்திலும் வரும்

## முதலாம் ஆண்டு நிறைவு விழா

சுன்னாகத்திலுள்ள சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா முதலாம் ஆண்டு நிறைவு விழா இன்று மாலை 4.00மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெற உள்ளது.

## உடற்பயிற்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்று


## முக்கிய அறிவித்தல்

### மாபெரும் கராட்டிக் கண்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணக் கல்லூரி லியோ கழகத்தின் ஆதரவில் 02-03-94 புதன்கிழமை நடைபெறவிருந்த மேற்படி கராட்டிக் கண்காட்சி தவிர்க்க முடியாத காரணங்களால் 07-03-94 திங்கட்கிழமை பி. ப. 6.00 மணிக்கு நடைபெறும் என்பதை கலா ரசிகர்களுக்கு அறிவிக்கின்றோம்.

தலைவர் எஸ். ஐங்கரன்

காட்சி தவிர்க்க முடியாத காரணங்களால் 07-03-94 திங்கட்கிழமை பி. ப. 6.00 மணிக்கு நடைபெறும் என்பதை கலா ரசிகர்களுக்கு அறிவிக்கின்றோம்.

தலைவர் எஸ். ஐங்கரன்
வியோ கழகம், யாழ்ப்பாணக் கல்லூரி.

(7652)

னத்தின் பெயர்கொண்ட ஒரு தனி அறை மட்டுமே இருந்ததாகவும் பெரிய நிறுவனக் கட்டடம் ஏதும் அங்கு காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போலியான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதை யடுத்து மருந்தகங்களிலும், தனியார் ஆஸ்பத்திரிகளிலும் உள்ள சந்தேகத்திற்கு இடமான மருந்துகளை நீக்கி விடுமாறு சுகாதார அமைச்சு பணித்துள்ளது.

### பங்கீட்டு

மேற்படி கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள 7000 பரல் மண்ணெண்ணெய் இறக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் இவை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஒரு குடும்பதிற்கு ஜனவரி மாத விநியோகமாக நான்கு லீற்றர் வீதம் விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ச)

யும் எடுத்துச் செல்லுமாறு கேட்கப்படுகின்றனர். இவ்வாறான சட்டரீதியான செயற்பாடுகளை எமது வாகன உரிமையாளர்கள் அறியாதவர்களல்ல. ஆகவே தயவு செய்து எமது வாகன உரிமையாளர்கள் தங்கள் சிரமத்தைப் பாராது இவ் விடயத்தில் காவல்துறை உறுப்பினர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டம்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த வலிகாமம் பிரதேச இணைப்புக் குழுக்களுக்கான சந்திப்புக் கூட்டம் நடப்பு ஆண்டில் ஒவ்வொரு மாதத்திலும் வரும் இரண்டாவது செவ்வாய்க்கிழமை தோறும் நடைபெறுவதற்கு வலிமேற்கு பிரதேச செயலர் திரு கா. சந்திரராசா அவர்களினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்கானை பொது நூலக மண்டபத்தில் இணைப்புக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக தெரிய வருகிறது. (41)

4.00 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெற உள்ளது.

### உடற்பயிற்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை கோட்டங்களைச்சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான 'உடற்பயிற்சிப்போட்டி 5-ம் திகதி சனிக்கிழமை காலை யாழ்-இந்துக்கல்லூரி மைதானத்தில் மேற்படி கோட்டங்களின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு ந. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். (22)

### 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னையின் திருமடியில்
14-04-1975

ஆண்டவன் திருவடியில்
31-01-1994

### கணபதிப்பிள்ளை இராஜநேசன்

நேசா, நேசா என்று அழுது புலம்புகின்றோம்
செந்நீரை கண்ணீரால் சேர்த்து வடிக்கின்றோம்
அன்பின் உறைவிடமே பாசத்தின் பிறப்பிடமே
நெஞ்சம் பதைக்கிறது பிரிவினை தாங்காது

அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா, அக்கா,
தங்கைமார், தம்பிமார்,
சித்தப்பாமார், சித்திமார், மாமா, உற்றார்,
புன்னாலைக் கட்டுவன், உறவினர்கள், நண்பர்கள்
தெற்கு. (7640)

### இதோ ஒரு நற்செய்தி!

பரமேஸ்வரா சந்தியில்

# போட்டோஸ்ரட் சேவை

உங்களின் போட்டோஸ்ரட் தேவைகளை பூர்த்திசெய்ய

**இன்று முதல்**

தனது சேவையை ஆரம்பிக்கின்றது,

## மாருதி வீடியோ விஷன்

மற்றும் பழைய, புதிய பாடல்களை சிறந்த முறையில் பதிவு செய்யவும், புதிய பாடல்களை கொம்பக்ற் டிஸ்க்கில் (**Compact Disc**) இருந்து நேரடியாக பதிவு செய்யவும் நாடுங்கள்

# மாருதி வீடியோ விஷன்

பரமேஸ்வரா சந்தி - திருநெல்வேலி

குறிப்பு: ஜென்டில்மென், திருடா - திருடா FULL SCREEN ORIGINAL பிரதி வெளிவந்துள்ளது.

(சி-8752)

### மலேரியா

ரங்கள் தெரிவித்தன.

தற்போது மலேரியா நோய்க்கு குடாநாட்டில் பலர் இலக்காகி வருவது தெரிந்ததே. இந்நிலையில் இம்மருந்தும் யாழ் போதனா மருத்துவமனையில் இல்லாமல் போயுள்ளது குறிப்பிடத்தக்கது.

### தேர்தலில்

வேன் என மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் றொகான் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இராணுவத்தைப் பொறுத்தவரை தேர்தல் முறைப்படி நடைபெறவேண்டும். அதில் குறித்த கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் வெல்ல வேண்டும் என்பது குறித்து எமக்கு அக்கறையில்லை என்றார்.

### அரச

சம் தரப்படல் வேண்டும் என தாம் ஒன்றியத்திடம் கேட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (ச)

### கிராம

மேலும் அவர் வாக்களிப்பு தமிழர் வாழும் பகுதிகளில் மந்த நிலையிலும், முஸ்லிம் வாழும் பிரிவுகளில் சுறுசுறுப்பாகவும் இருந்தது. எப்படியிருந்தாலும் ஒட்டு மொத்தமாக 50 சத விகிதத்தினர் வாக்களித்ததாகத் தெரிவித்தார்.

### கிறிஸ்தவ

அழைக்கக்கூடாது. பிக்குகளும், ஆரியரட்ணாவும் புலிகளுடன் பேசக்கூடாது நாம் பத்து வருடங்களாக தெரிவித்து வந்த பயங்கரவாதப் பிரச்சினை தான் இது என்பதை இன்றைய ஜனாதிபதி முழுமையாக ஏற்றுகொண்டுள்ளார். இது சிங்களவர்களின் நாடு என்பதை சகலரும் ஏற்றுகொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை சகல பௌத்த பீடங்களையும் சேர்ந்த பௌத்த பிக்குகளும் தமதுசீற்றத்தை வெளிக்காட்டியுள்ளனர். கடந்த சில வாரங்களாக கிறிஸ்தவ மதகுருமார் சமாதான முயற்சியில் வட பகுதிக்கான நல்லெண்ண விஜயங்களை மேற்கொண்டதைத் தொடர்ந்து இச்சீற்றம் மேலும் அதிகரித்திருப்பதாக கொழும்பில் இருந்து இறுதியாக எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கிழக்கு

குணவர்தனா, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டிக்கில் பீரிஸ், தேர்தல் ஆணையாளர், பிரதமர், 'எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனிடையே கல்முனையில் ஐ. தே. க 16 வாகனங்களில் ஆட்களை தேர்தல் நிலையங்களுக்கு ஏற்றிச் சென்றதாகவும் இதற்கு அரசசார்பற்ற நிறுவனமான கெயர் நிறுவனத்தின் வாகனங்களும் பயன்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" கணினியமைப்பில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.